பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 13 புதன்கிழமை 27.06.2018 கதிர் 233

**இனி இது ரகசியம் அல்ல!**

வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும், அவரது மாணவனும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும் தங்களுக்குள் அரசியல் ரீதியாகப் பிணக்கப்பட்டு நின்கின்றார்கள் என்று எங்களைப் போன்ற பார்வையாளர்கள் பக்கம் 03

# தமிழரை ஏமாற்றிவிட்டார் மைத்திரி இனி சர்வதேசத்தை நாடுவதே வழி



## வடக்கு மாகாண சபையில் நேற்று அயூப் அஸ்மின் பகிரங்கக் கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழ் மக்களின் ஆதரவுடன் பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால தமிழர்களை ஏமாற்றிவிட்டார். இனியும் நாங்கள் அவரில் நம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. ஆகவே எமது மக்களின் பிரச்சினைகளை நாம் இனி சர்வதேசத்துக்கே எடுத்துக் கூற வேண்டும்.

- இவ்வாறு நேற்று வடக்கு மாகாண சபையில் பகிரங்கக் கருத்தை முன்வைத்தார் ஆளுந்தரப்பு உறுப்பினர் அயூப் அஸ்மின். பக்கம் 14

## செங்கோல் தூக்கிவரக் கூட சபையில் ஆளணி இல்லை

### அவைத் தலைவர் சிவஞானம் ஆதங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

மாகாண சபை அமர்வுக்குச் செங்கோலைத் தூக்கிக் கொண்டு வருவதற்குக் கூட ஆளணி இல்லாமல் பெரும் சிரமப் படுவதாகக் கூறிய அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபையின் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டுமெனவும் பக்கம் 14

## ஜனாதிபதி, பிரதமர், எம்.பிக்கள் சகலரும் கூட்டுக் குற்றவாளிகள்

### சபையில் கஜதீபன் சாடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

"தமிழ் மக்களுக்கு எதுவுமே செய்யாமல் ஏமாற்றியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான். ஆகவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பார்ப்போம் என எங்கள் ஆட்கள் சொல்வார்கள் என் பக்கம் 14

## சிகரெட்டை முதலில் தடை செய்யவேண்டும்

### வடமாகாண சபையில் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

மத்திய அரசு புகையிலைச் செய்கையைத் தடை பக்கம் 14

## பிரபாகரன் சொன்னது முற்றிலும் உண்மையே

### ரணில் குறித்து ஞானசாரர்

கொழும்பு, ஜூன் 27

ரணில் ஒரு தந்திர நரி என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அப்போதே புரிந்த விடயம். ஆனால் அது பக்கம் 14

## நாகரிகம் தெரியாத சில்லறைகள் மாகாண சபையை விமர்சிப்பதா?

### அவைத் தலைவர் சி.வீ.கே. காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்கு மாகாண சபை நாகரிகமாகவும் நேர்த்தியாகவும் செயற்பட்டு வருகின்றபோதும் வெளியில் உள்ள ஒரு சில சில்லறைகள் மாகாண சபையில் குறுக்கீடுகள் உள்ளன எனக் கூறி வருகின்றன. அவை முற்றிலும் பக்கம் 03

## கழுத்தைக் கயிற்றால் இறுக்கி கொல்லப்பட்டுள்ளார் சிறுமி!

### துஷ்பிரயோகமும் இடம்பெற்றுள்ளதாம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கழுத்தில் கயிற்றால் இறுக்கப்பட்டதால் சிறுமி மூச்சடங்கி உயிரிழந்துள்ளார். சிறுமியைக் கொலை செய்யும் நோக்குடனேயே கழுத்தில் கயிறு இறுக்கப்பட்டுள்ளது என்று பக்கம் 03

## வீட்டுத்திட்டம் சீனாவுக்கு வழங்கப்பட்டமை சரியே

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை பக்கம் 14

## விரைவில் உதயங்க கொழும்புக்கு!

கொழும்பு, ஜூன் 27

மிக் விமானக் கொள்வனவு மோசடியில் குற்றம் பக்கம் 03

## காதுத் தோட்டை அபகரிக்கவே இளைஞரால் சிறுமி கொலை!

### பாடசாலைச் சீருடை மீட்பு; ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

சிறுமி அணிந்திருந்த காதுத் தோட்டை அபகரிக்கவே சிறுமியை சம்பந்தப்பட்ட இளைஞன் பற்றை மறைவுக்கு இழுத்துச் சென்றுள்ளார். பக்கம் 14

## 16 பேர் அணி விமலுடன் பேச்சு

கொழும்பு, ஜூன் 27

அரசிலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் பக்கம் 03

## போதைக்கு எதிராக யாழில் திரண்டனர் 1000 மாணவிகள்



யாழ்ப்பாணம், ஜூன் 27

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று பக்கம் 14

## மாணவி கொலைக்கு நீதி கோரி காட்டுப்புலத்தில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 27

சுழிபுரம், காட்டுப்புலம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 6 வயதுச் சிறுமிக்கு நீதி கோரி காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை மாணவர்களும் மக்களும் இணைந்து பாடசாலைக்கு முன்பாகப் பக்கம் 14

# ஐ.நா. அமைதிப்படை தொடர்பான செய்தியை மறுக்கிறது மனித உரிமை ஆணைக்குழு



கொழும்பு, ஜூன் 27

ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்பப்படவிருந்த அடுத்த தொகுதி இலங்கை இராணுவத்தினரை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனுமதி அளிக்காமல் தடுத்து வைத்திருக்கிறது என வெளியாகிய செய்திகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்காததால், லெபனானுக்கு 101 இலங்கை படையினரைக் கொண்ட அணியை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, இந்தச் செய்தி தவறானது என்று கூறியுள்ளது.

ஆணைக்குழுவின் ஆய்வு முறைகளில்எந்ததாமதமும் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அதன் தலைவர் தீபிகா உடகம, ஆய்வுக்குத் தேவையான தகவல்களை வழங்கினால் அதனை இலகுவாக்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

காலக்கெடுவுக்குப் போதிய முன்னறிவிப்பு இன்றி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி கொழும்பில் இராணுவம் மற்றும் கடற்படை தளபதிகள், விமானப்படை தலைமை அதிகாரி, சிறப்பு அதிரடிப் படையின் மூத்த அதிகாரி, பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகள், வெளிவிவகார அமைச்சின் செயலர், மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்கள் இணைந்து, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைப் பணியகத்தின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர்.

இதன்போது, ஐ.நா நியமங்களுக்கு ஏற்ப ஆய்வுசெயல் முறைக்கான விதிமுறைகள், மற்றும் அதனை துரிதப்படுத்துவது குறித்து இறுதி செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் மரக் கடத்தல்:

## தடுத்து முறியடித்தனர் ஓமந்தை பொலிஸார்





வவுனியா, ஜூன் 27

வவுனியாவில் மரக்கடத்தல் ஒன்று ஓமந்தை பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து ஓமந்தையில் இருந்து வவுனியாவிற்கு பெறுமதி வாய்ந்த முதிரை மரக் குற்றிகளைக் கடத்தி வந்த ஹன்ரர் ரக வாகனத்தை ஓமந்தை பொலிஸார் துரத்திச் சென்றபோது கொக்குவெளி பகுதியில் வாகனம் தடம் புரண்டுள்ளது.

இதனையடுத்து, மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் வகனத்தை கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தக் கடத்தல் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸ் இன்ஸ்பெக்டர் பண்டார தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ - 100)

# கிளிநொச்சியில் மீண்டும் ஆயுதம் தேடி அகழ்வுப் பணிகள் ஆரம்பம்





முல்லைத்தீவு, ஜூன் 27

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை குளம் பகுதியில் ஆயுதங்கள் இருக்கலாம் எனும் சந்தேகத்தின் பேரில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து நீதிமன்றின் அனுமதியை பெற்று இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் நடந்தன.

அண்மைக்காலமாக வன்னியின் பல இடங்களில் இவ்வாறு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(கு -70)

# இன்று இலங்கைக்கு வருகிறார் பாகிஸ்தான் கூட்டுப் படைத் தளபதி



கொழும்பு, ஜூன் 27

பாகிஸ்தானின் கூட்டுப் படைத்தலைமை அதிகாரிகள் குழுவின் தலைவரான ஜெனரல் சுபைர் மஹ்மூட் ஹயட், நான்கு நாள்கள் பயணமாக, இன்று இலங்கைக்கு வரவுள்ளார்.


இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் அழைப்பின் பேரில் இவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜெனரல் ஹயட், பாகிஸ்தானின், கூட்டுப்படைத் தலைமை அதிகாரிகள் குழுவின் 17 ஆவது தலைவர் என்பதுடன், பாகிஸ்தான் படைகளில் உள்ள நான்கு நட்சத்திர ஜெனரல்களில் மூத்தவராவார்.

இவர் இலங்கைப் பயணத்தின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து, முக்கியமாக, பயிற்சி மற்றும் இராணுவ ஒத்திகைகள் தொடர்பாக பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெரிக்க கடற்படைக் குழு கடற்படைத் தளபதியுடன் பேச்சு





கொழும்பு, ஜூன் 27

அமெரிக்க கடற்படையின் சர்வதேச திட்டங்களுக்கான பிரதி உதவி செயலர் றியர் அட்மிரல், பிரான்சிஸ் டி மோர்லி தலைமையிலான குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

பரஸ்பர நலன்கள் மற்றும் இரு தரப்பு ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்கே அமெரிக்க கடற்படையின், சர்வதேச திட்டங்களுக்கான குழு இலங்கைக்குவந்துள்ளது.

இந்தக் குழுவினருக்கு கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரின் இல்லத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதேவேளை, இலங்கை கடற்படைத் தலைமையகத்தில், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைப் பணிப்பாளர் பியால் டி சில்வா ஆகியோரையும், றியர் அட்மிரல், பிரான்சிஸ் டி மோர்லி தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

# ஹிட்லரைப் போன்ற ஆட்சியை அமைக்க வேண்டும்; முட்டாள்தனமான அறிவுரை என்கிறார் ஜேர்மன் தூதுவர்



கொழும்பு, ஜூன் 27

ஹிட்லரைப் போன்ற ஆட்சியை அமைக்க வேண்டும் என்று கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர், அளித்த அறிவுரை பொறுப்பற்ற - முட்டாள்தனமானது என்று இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோன் ரொட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஒரு ஹிட்லர் தேவை என்று உபாலி தேரர் வெளியிட்டுள்ள மூர்க்கத்தனமான கருத்துக்கு, ஜனாதிபதி, பிரதமர் வெளியிட்ட கண்டனங்களுடன் தாம் முற்றிலும் இணங்கிப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

'காவி உடை அணிந்து கொள்வது, பொறுப்பற்ற முட்டாள்தனமான கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்காது என்பதையே இது நிரூபிக்கிறது.

எமக்கு இன்னும் அதிகமான ஜனநாயகம், தேவை. உலகம் முழுவதற்கும் அது தேவை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்ய துரித வேலைத்திட்டம் முன்னெடுப்பு!

கிராமிய மக்களை பொருளாதார ரீதியில் ஊக்குவிப்பதற்காக நீர்த்தேக்க பகுதிகளில் கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்யும் துரித வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

லுனுகம்வேஹெர நீர்த்தேக் கத்தில் மீன்குஞ்சுகளை விடுவிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வள மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சா திலிப் வெத ஆராய்ச்சி தலைமையில் நடைபெற்றது.

இந்த திட்டத்தின் கீழ் 3 லட்சம் மீன் குஞ்சு கள் லுனுகம் வேஹெர நீர்த்தேக்கத்தில் விடுவிக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக உணவுக்காக பயன்படுத்தக் கூடிய 60 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

# சு.கவிலிருந்து பிரிந்து சென்ற அனைவரையும் இணைப்போம்!

## 16 பேர் அணி தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து செயற்படும் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஜனாதிபதித் தேர்தலில் பொதுச் சின்னம் ஒன்றில் களமிறங்கவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிப்ப வர்கள் பிரிந்து செயற்பட்டுஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரைக் களமிறக்கினால் அந்த வேட்பாளரால் வெற்றி பெறமுடியாது.

ஆகவே சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து செயற்படும் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஜனாதிபதித் தேர்தலில் பொதுச் சின்னம் ஒன்றில் ஜனாதிபதி வேட்பாளரைக் களமிறக்கவுள்ளோம்.

களமிறங்கும் வேட்பாளர் நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம்கள் உட்பட அனைவரினதும் ஆதரவைப் பெற்ற முன்மாதிரியானவராக இருக்க்வேண்டும். கட்சியிலுள்ள சகல தரப்பும் பேச்சு நடத்தி அவ்வாறான உறுப்பினரைத் தெரிவு செய்ய வேண்டும்–என்றார். (ஐ)

# ஓட்டோ தடம்புரள்வு; தப்பினார் மாணவி

யாழ்ப்பாணம், ஜுன் 27

யாழ். வின்சர் சந்தியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் பாடசாலை மாணவியை ஏற்றிச் சென்ற ஓட்டோ தடம்புரண்டது. தெய்வாதீனதாக மாணவிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது. கஸ்தூரியார் வீதியில் பயணித்த காரும் ஸ்ரான்லி வீதியில் பயணித்த ஓட்டோவுமே மோதி விபத்துக்குள் ளாகின. இதனால் ஓட்டோ தடம் புரண்டது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதினாலும், உண்மையில் அது ஒரு தந்தை – மகன் இடையேயான ஊடல் போன்றது தான் என்பது நெருங்கிப் பழகும் போது தெரிகின்றது.

"கண்ணா...! நீயும் நானுமா?" – என்று 'கௌரவம்' படத்தில் அப்பா சிவாஜியும் மகன் சிவாஜியும் சட்ட மோதல் நடத்தும் விவகாரம் போன்றது தான் இதுவும்.

படத்தில் இருவரும் வழக்கறிஞர்கள். இங்கு நிஜத்தில் – ஒருவர் நீதியரசர்; மற்றவர் சட்டத்தரணி. அவ்வளவுதான் வித்தியாசம்.

அடுத்த முதலமைச்சர் யார் என்ற விடயத்தில் இருவருக்கும் இடையில் இப்போது கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அது விரைவில் களையப்பட்டு விடும் என்றுதான் என் ஊகம் கூறுகின்றது.

அடுத்த முதல்வர் விவகாரம் இப்போது சூடு பிடித்தாலும், இப்போதைய முதல்வர் நியமனத்தில் அவர்கள் இருவருக்கும் இடையில் – நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் சுமந்திரன் இடையில் – அந்நேரத்தில் பரிமாறப்பட்ட கருத்துக்களை ஒரு தடவை மீள நினைவூட்டுவது, இன்றைய முரண்பாடுகளைத் தீர்க்க உதவக் கூடும்.

அதனால் இந்த 'ப்ளாஷ் – பாக்'.

2013 நடுப்பகுதி. வடக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரம். முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் அப்போதைய தலைவருமான இரா.சம்பந்தன் அறிவிக்க வேண்டிய வேளை.

நீதியரசர் விக்னேஸ்வரனைத் தேடிச் சென்று சந்தித்து அப்பதவியை ஏற்குமாறு கோருகின்றார் சம்பந்தன். மறுக்கிறார் நீதியரசர். *"எனது ஓய்வுக் காலத்தை ஆன்மீகத்தோடு விட்டு விடுங்களேன்!"* –என்றும் கோருகின்றார். சம்பந்தன் விடவில்லை. யோசித்துப் பதில் சொல்லுங்கள் என்று கூறிவிட்டு வந்தார்.

சில நாள்கள் கழிந்து தேவநேசன் நேசையாக நீதியரசர் விக்னேஸ்வரனைச் சந்தித்து, முதல்வர் வேட்பாராளராகும்படி கோருகின்றார்.

மீண்டும் பணிவாக மறுக்கிறார் நீதியரசர். *"என் முடிவை மின்னஞ்சலில் சம்பந்தனுக்கு அனுப்பி விட்டேன்"* – என்கிறார்.

அது குறித்து நீதியரசருடன் பேசுமாறு சுமந்திரனைக் கேட்கிறார் சம்பந்தன். அதற்கு அமைய தமது ஆசிரியரான நீதியரசர் விக்னேஸ்வரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கின்றார் சுமந்திரன்.

அவரிடமும் மறுக்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன். தமது இயலாமையை மின்னஞ்சலில் சம்பந்தனுக்குத் தாம் தெரிவித்து விட்டார் என்ற தகவலையும் கூறுகின்றார் அவர்.

*''சம்பந்தன் ஐயாவுக்கு மின்னஞ்சல் அனுப்பினால் மட்டும் சரிவராது. அனுப்பி விட்டு அப்படி அனுப்பியிருக்கின்றமை குறித்து நீங்கள் தொலைபேசியில் அவருக்குத் தகவல் தெரிவித்தால் தான் அவர் அந்த மின்னஞ்சலைத் தாம் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்."* – என்றார் சம்பந்தன்.

*"அப்படியா சங்கதி?"* என்று கேட்ட நீதியரசர் விக்னேஸ்வரன், *"எனது பதிலில் அந்த முதலமைச்சர் பதவிக்குக் கனகச்சிதமான ஒருவரை நான் சாமுக்கு (சம்பந்தன் ஐயாவுக்கு) பரிந்துரை செய்திருக்கிறேன்."* – என்றும் சொன்னார்.

*"யாரைப் பரிந்துரை செய்திருக்கின்றிர்கள்?"* –என்று கேட்ட சுமந்திரனை நீதியரசர் கூறிய பதில் தூக்கி வாரிப் போட்டது.

*"உன்னைத்தான் (சுமந்திரனைத்தான்) பரிந்துரைத்துள்ளேன். நீதான் அதற்கு மிகப் பொருத்தமானவன். உன் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தை வேறு ஒருவருக்கு வழங்குமாறும் சாமுக்கு நான் பரிந்துரை செய்துள்ளேன்.''* – என்றார் விக்னேஸ்வரன்.

*"என்ன ஸேர் விளையாடுகின்றீர்களா?"* – என்று மறுதலித்த சுமந்திரன் தேசிய அரசியலில் கொழும்பில் இருந்து தாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விவரித்தாராம்.

ஆனால், நீதியரசர் விக்னேஸ்வரன் அதனை ஏற்கவில்லையாம்.

*"நீதான் முதலமைச்சராக வேண்டும். அதற்குப் பொருத்த மானவன் நீதான். உன்னை முதலமைச்சராக்குமாறு நான் எனது கடவுளிடம் பிரார்த்திப்பேன். நீயும் உனது ஜீஸஸிடம் அதற்காக மன்றாடு."* – என்றாராம் நீதியரசர்.

ஆனால் சுமந்திரன் இணங்கவில்லை. விக்னேஸ்வரனை முதல்வராக்க சம்பந்தனுடன் சேர்ந்து ஒற்றைக் காலில் நின்று பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. முரண்பாடுகள் நீடிக்கின்றன. ஆசிரியர் – மாணவர் உறவும், அதில் ஊடலும் தொடர்கின்றன. ஆனால் இந்த ஊடல் அடுத்த மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் கூடலாக மாறிவிடும் என்று நம்புவதற்கான ஏதுநிலைகள் தாராளமாகத் தென்படுகின்றன. அந்தச் செய்தி விரைவில் வரும் என நாம் எதிர்பார்க்கலாம் என்பது எனது ஆரூடம். பொறுத்திருந்து பார்ப்போமே...!

சரி. சம்பந்தன் ஐயாவுக்கு 2013இல் தாம் அனுப்பிய மின்னஞ்சலில், சுமந்திரனை வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு அனுப்பி விட்டு, அவரது தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை வேறு ஒருவருக்கு வழங்கும்படி நீதியரசர் விக்னேஸ்வரன் பரிந்துரைத்திருந்தார் அல்லவா? அவர் யார் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.

அவரும் ஒரு சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிதான். சம்பந்தனுக்கும் நண்பர்; விக்னேஸ்வரனுக்கும் நண்பர்; சுமந்திரனுக்கும் சீனியர். இனி, அவர் யார் என்று ஊகிப்பது உங்கள் கெட்டித்தனம். **-மின்னல்-**

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டப்பட்டுள்ள ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க விரைவில் கொழும்பு வரவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உதயங்க வீரதுங்க இலங்கை திரும்பும்போது கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி சார்பான அமைப்பொன்று நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளது.

உதயங்க கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்கான நீதிமன்றத்தின் உத்தரவைப் பெறுவதற்கு அந்த அமைப்பு தீர்மானித்துள்ளது.

உதயங்க வீரதுங்கவின் சார்பில் தமது அமைப்பின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகவுள்ளனர் என நளின் நிசங்க என்பவர் தெரிவித்துள்ளார்.

மிக் விமானக் கொள்வனவு மோசடி தொடர்பில் உதயங்கவுக்கு எதிராக இன்ரர்போல் பிடியாணையை பிறப்பித்துள்ள நிலையிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உதயங்க வீரதுங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனராவார். (ஐ)

## கழுத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மயூரதனின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை தெரிவிக்கின்றது.

சுழிபுரம் காட்டுபுலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிவனேஸ்வரன் றெஜீனா (வயது - 6 ) என்ற சிறுமி அப்பகுதி தோட்டக் கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று சட்ட மருத்துவ அதிகாரி மயூரதன் தலைமையில் மருத்துவ பீட மாணவர்களின் முன்பாக உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

சிறுமியின் கழுத்தில் கயிற்றால் இறுக்கப்பட்டதால் மூச்சடங்கி உயிரிழந்துள்ளார் என நீதிவானுக்கு ஒப்படைக்கப்பட்ட சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியல் வன்புணர்வு பற்றி எதுவும் அறிக்கையில் கூறப்படவில்லை என்றும் அறியவந்தது. ஆனால் துஷ்பிர யோகத்துக்கு சிறுமி உட்படுத்தப்பட்டமைக்கான தடயங்கள் காணப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-7)

## 16 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவன்ஸவைச் சந்தித்து பேசியுள்ளனர்.

புறக்கோட்டையில் அமைந்துள்ள, தேசிய சுதந்திர முன்னணியின அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே, ஜோன் அமரதுங்க, டிலான் பெரேரா, சந்திம வீரக்கொடி, அநுராதா ஜயரத்ன, திலங்க சுமதிபால ஆகியோரே விமல் வீரவன்ஸவைச் சந்தித்துள்ளனர். (ஐ)

## நாகரிகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறான கருத்துக்கள். அவ்வாறான சில்லறைகள் சபை நாகரிகம் தெரியாத சில்லறைகளே. அவர்கள் தங்கள் வசதிகளுக்காக இவ்வாறு கூறி வருகின்றனர்.

– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வாரன யோகேஸ்வரி பற்குணராசா மாநகர சபையின் கடந்த அமர்வின்போது சபையில் குறுக்கீடுகள் செய்கிறார் எனவும், அவ்வாறான குறுக்கீடுகளை சபை நாகரிகம் கருதி அவர் நிறுத்தவேண்டுமெனவும் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் கேட்டுக்கொண்டார்.

இத்தகைய குறுக்கீடுகளை மாகாண சபையைப் பார்த்தே தாம் பழகிக் கொண்டார் என மாநகர முதல்வருக்கு யோகேஸ்வரி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற மாகாண சபை அமர்வின்போது யோகேஸ்வரியின் கருத்தக்குப் பதிலளிக்கும் வகையில் அவைத் தலைவர் சிவஞானம் மேற்கண்டவாறு காட்டமாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 125 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் சபா மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர் ஆர்.ஜெயசேகரம் கொண்டுவந்த பிரேரணையொன்று தொடர்பில் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றிக் கொண்டிருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா அந்தப் பிரேரணையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் ஏதோ கருத்துக் கூறும் வகையில் முணுமுணுத்தார். இதனை அவதானித்த தவராசா, தான் பேசும்போது குறுக்கீடு செய்யவேண்டாமென்றும், பேசி முடிந்ததும் நீங்கள் உங்கள் கருத்தை முன்வையுங்கள் என்றும் கல்வி அமைச்சரைப் பார்த்துக் கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவைத் தலைவர், ஒருவர் பேசி முடிய மற்றவர் பேசலாம் என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவைத் தலைவர் –

இப்போது குறுக்கீடுகள் பற்றிச் சில்லறைகள் எல்லாம் கதைக்கின்றன. அதாவது மாகாண சபையில் குறுக்கீடுகள் நடப்பதாக வெளியில் இருக்கும் அத்தகைய சில்லறைகள் கூறுகின்றன. அவ்வாறான கருத்துக்களைக் கவனத்திலெடுக்கத் தேவையில்லை. ஏனெனில் நாங்கள் நாகரிகமாகச் செயற்பட்டு வருகின்றோம். அவ்வாறு நாகரிகமாகவே தொடர்ந்தும் செயற்படுவோம். இந்தச் சபை ஒழுங்காகத்தான் நடக்கின்றது. இனியும் அவ்வாறே நடக்கும் – என்றார்.

இதன்போது எழுந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் தவநாதன் தனது கருத்தைக் கூற முற்பட்டார்.

இதன்போது அவைத் தலைவர், "தவநாதனே உங்களுக்கு நாகரிகம் தெரியும்தானே. இந்த உயரிய சபையில் நீங்கள் எழுந்து நின்றுதானே பேசுகின்றீர்கள். இங்கு முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் சபையின் மாண்பை மதித்து நாகரிகமாகச் செயற்படுகின்றீர்கள். ஆகவே மாகாண சபையைப் பார்த்துப் பழகியவர்கள் என்று கூறுகின்றவர்கள் அவ்வாறு சபையின் மாண்பை மதித்தா செயற்படுகின்றார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதுவெல்லாம் தவறு. அவர்கள் தமக்கு வசதியாகச் செயற்படுகின்றனர்" – என்றார்.

மாநாகர சபையின் முன்னாள் முதல்வராக இருந்த யோகேஸ்வரி பற்குணராசா தற்போது அந்தச் சபையில் உறுப்பினராக உள்ளார். தற்போது நடக்கும் மாநகர சபை அமர்வுகளில் அவர் இருக்கையில் அமர்ந்தவாறே தனது உரைகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தி வருகின்றார். அவரின் இத்தகைய செயற்பாடுகள் சபையின் மாண்பை மீறும் வகையில் உள்ளன என்றும், சபையின் மாண்பை மதித்து செயற்பட வேண்டுமென்று முதல்வர் ஆர்னோல்ட் பல தடவைகள் கூறியும் அவர் தொடர்ந்தும் இருக்கையில் அமர்ந்தவாறே உரையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## இது இப்போது தேவையா?

*இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற விடயங்களை விசாரித்து, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலை நிறுத்தும் விவகாரத்தைக் கையாளுவதற்கு வசதியாக, அது தொடர்பில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை –*

*அல்லது விசேட சர்வதேச தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை – ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டும்.*

– இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்று யாழ் மாநகர சபையில் கொண்டு வரப்பட்டு எல்லாத் தரப்பினரதும் ஒருமித்த ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொண்டு வந்த இந்தப் பிரேரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய அனைத்துத் தரப்பினரதும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

யாழ் மாநகர சபைக்கு தேர்தல்கள் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று இன்னும் கதிரையில் சரியாக அமரவில்லை. அதற்கு இடையில் இந்தப் பிரேரணை திடுதிப்பெனக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இது, இப்படி அவசரமாகத் தேவைப்படுகின்ற ஒரு விடயமா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது நியாயமானதே.

இலங்கையில் மொத்தம் 23 மாநாகர சபைகள். அவற்றில் வடக்கு, கிழக்கில் நான்கு மாநகர சபைகள்தான். கிழக்கில் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய மூன்று மாநகர சபைகள். வடக்கில் ஒன்று மட்டும்தான். அது யாழ் மாநகர சபை.

இவற்றுள் காலத்தால் முந்தியது யாழ் மாநகரசபையே. அது 1949 இல் – இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடு – ஸ்தாபிக்கப்பட்டது. மட்டு. மாநகர சபை 1967 இல் உருவானது. மற்றைய இரண்டும் – கல்முனை மாநகர சபை யும், அக்கரைப்பற்று மாநகர சபையும் புதிய மிலேனியத்தில், முறையே 2001 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உருவானவை.

அப்படிப் பார்த்தால் தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் காலத்தால் முந்திய – மிக முக்கியமான – மாநகர சபை, யாழ் மாநகர சபைதான்.

தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபை எவ்வளவு முக்கியமானதோ – மூலமானதோ – அதேபோன்று யாழ்ப்பாண மாநகரசபையும் முக்கியமானதும் மூலமானது மாகும்.

யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் விடயம் – பொறுப்புக் கூறலை நிலைநிறுத்தும் விவகாரம் – ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான அம்சம். அதில் தமிழர் தாயகம் பிரிந்து நிற்கமுடியாது. ஒருமித்த கருத்தில், ஒன்று பட்டுத்தான் நிற்கவேண்டும்; நிற்கின்றது; இனியும் நிற்கும்.

ஆனால், அதை வெளிப்படுத்துவதற்காக யாழ் மாநகர சபையில் அத்தகைய பிரேரணை ஒன்றை, புதிய நிர்வாகம் வந்த கையோடே கொண்டு வந்து அவசர அவசரமாக நிறைவேற்ற வேண்டுமா என்பது கேள்விக்குரியதே.

தமிழ்த் தேசியக் கொள்கைப் பிடிப்புள்ள சிலர், தாங்கள் மட்டுமே அந்தத் தேசியக் கொள்கையை 24 கரட் தங்கம் போல – மாசுமறுவின்றி – கடைப்பிடிப்பவர்கள் என்று காட்டுவதற்கு இந்தத் தீர்மானம் பயன்படக் கூடும்.

ஏற்கனவே இவ்விடயத்தில் காத்திரமான தீர்மானம் ஒன்றை வடக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது. அது நல்லதே.

ஆனால், மறுபுறத்தில் அந்த மாகாண சபை தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட விடயங்கள் அல்லாத விவகாரங்களில் எண்ணுக்கணக்கற்ற பிரேரணைகளைப் பரிசீலித்து, விவாதித்து, தீர்மானங்களை நிறைவேற்றியதுதான் மிச்சம், உருப்படியாக ஏதும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுத்தான் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது

போகின்ற போக்கைப் பார்த்தால் யாழ். மாநகர சபையும் அவ்வாறு 'வெற்று வேட்டு' அவையாக மாறி விடுமோ என்ற அச்சத்தை – சந்தேகத்தை – எடுத்த எடுப்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றும் நடவழக்கை ஏற்படுத்தியிருக்கின்றது.

யாழ். மாநகர சபையின் இந்த முன்மாதிரியைப் பார்த்து வடக்கு, கிழக்கில் – தமிழர் தாயகத்தில் – உள்ள பல்வேறு உள்ளூராட்சி சபைகளுக்கும் இந்தச் 'சர்வதேச குற்றவியல்' நீதிமன்றத்தை அமைக்க கோரும் தீர்மானம் என்னும் காய்ச்சல் பற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'கொள்கைப் பற்றாளர்கள்' சிலர் 24 கரட் தூயதங்கம் போன்ற தங்களின் தூயகொள்கைப் பிடிப்பை நிரூபித்து, துலாம்பரப்படுத்தி பிரசாரம் தேடுவதற்காகக் கொண்டு வந்த பிரேரணையை, சர்ச்சைக்கு இடமளித்து, வீண் குழப்பங்களை ஏற்படுத்தாமல், அதிகம் பேசி இழுபறிப்படவிடாமல், சாணக்கியமாக முடித்து வைத்திருக்கின்றார் யாழ். நகர மேயர் ஆர்னோல்ட்.

பெரும்பான்மை பெறாத சபையை வைத்துக் கொண்டு நிர்வாகத்தை ஒப்பேற்றுவதானால் இப்படி சமயோசிதமாகவும், வளைந்து கொடுத்தும், காரியங்களை அவர் ஆற்றுவது தவிர்க்க முடியாததும், யதார்த்தமானதும்தான்.

இத்தகைய ஊடகங்களுக்குத் தீனிபோடும் பிரேரணைகளுக்கும் பேச்சுக்களுக்கும் இடமளிப்பதை விடுத்து, மக்கள் வாக்களிப்பைச் சந்தித்த சமயம் 'தூய கரங்கள் – தூய நகரம்' என்பவை போன்ற தலைப்புகளில் தாங்கள் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத் திட்டங்களில் எவற்றையாவது உருப்படியாக நிறைவேற்றுவதில் சபை உறுப்பினர்கள் தீவிரம் காட்டுவதுதான் பொருத்தமானதாகும்.

# அமெரிக்கா விலகினாலும் தப்பமுடியாது இலங்கை

## ஜீ.எல். பீரிஸ் அரசுக்கு மிரட்டல்



கொழும்பு, ஜூன் 27

ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்கா, கவுன்ஸிலில் இருந்து விலகியுள்ள போதிலும் அந்தத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்றவேண்டிய கட்டாய நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமைக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டுமெனவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு தற்போதைய அரசு பரிந்துரைகளை நிறைவேற்றுவதாக ஒப்புதல் வழங்கியமையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த வாரம் ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளது. ஆனால் விலகும்போது ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலைக் கடுமையாக விமர்சித்திருந்தது. அவ்வாறு விமர்சித்த பின்னரே அமெரிக்கா விலகியது. ஐ.நா மனித உரிமை கவுன்ஸில் பக்கச் சார்பாகச் செயற்படுவதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

ஐ.நா மனித உரிமை கவுன்ஸில் மனித உரிமை தொடர்பாக எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளாதெனவும் தங்களுடைய தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்து கொள்வதாகவும் இதனால் இது அரசியல் செயற்பாடுகளெனவும் மனித உரிமை சட்டத்துக்கு உட்பட்ட வகையில் செயற்படவில்லையெனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இதனையே 4 வருடங்களுக்கு முன்னர் மஹிந்த ஆட்சி காலத்திலும் கூறினோம். இதனையே தற்போது அமெரிக்காவும் கூறியுள்ளது. ஆனால் நாங்கள் எவ்வித மோசமான வார்த்தைகளும் பிரயோகிக்கவில்லை. மஹிந்த ஆட்சிகாலத்தில் அமெரிக்காவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதைத் தாமதப்படுத்தியமையினாலேயே இன்று இராணுவத்தின் கௌரவம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அப்போது எமது நாட்டு இராணுவம் எவ்வாறான தவறை செய்தது என்பதைச் சர்வதேச சட்டத்தின் மூலம் நிரூபிக்குமாறு கோரியிருந்த அதேவேளை, எமது இராணுவம் எவ்வித தவறையும் செய்யவில்லை. அவர்கள் நிரபராதிகள் என்று நிரூபிப்பதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தோம்.

ஆனால்-தற்போதைய அரசு 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் எமது இராணுவத்திற்கு எதிராக முன்வைத்த பரிந்துரைகளை இலங்கையின் பூரிந்துரை போன்று அனைத்து நாடுகளிடமும், அரசு அனுசரணை கோரியிருந்தது. அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகு, 2017 ஆம் ஆண்டு தற்போதைய அரசு மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டு வருட அவகாசத்தைக் கோரியுள்ளது.

அதன் பின்னர் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அல் ஹுசைன் ஜெனீவாவில் நடத்திய ஊடக சந்திப்பொன்றில், இலங்கைக்கு எதிரான பரிந்துரைக்கு ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் வேறு எந்த நாட்டின் அனுமதியும் கிடைக்கப் பெறவில்லையெனக் கூறியிருந்தார்.

அதன் பின்னர் நாட்டின் அரசமைப்பை மாற்றியமைத்தல், இராணுவத்தை மறுசீரமைப்புச் செய்தல், வடக்கிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றுதல் என அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் அனுமதி பெற்று ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் அரசினால் உறுதிமொழி முன்வைக்கப்பட்டது.

ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்கா அதிலிருந்து விலகியுள்ளபோதிலும் அமெரிக்காவின் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாய நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது; இந்த நிலைமைக்குத் தற்போதைய அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

அரசை ஆட்சியில் அமர்த்திய புலம்பெயர்ந்தோரின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் தமக்கு உதவியமைக்காக நன்றிக் கடனைச் செலுத்துவதற்குமே இவ்வாறான செயற்பாடுகளை தற்போதைய அரசு முன்னெடுக்கிறது. – என்றார்.

(ஐ)

# ஆசிரியர் இடமாற்றங்கள் சகலதையும் வருடக் கடைசியில் முடிக்கவேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 27

நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் ஆசிரியர் இடமாற்றம் மிகவும் முறைகேடாக நடைபெறுகின்றன. இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு ஆசிரியர்களின் எவ்வகையான இடமாற்றமாக இருந்தாலும் வருட இறுதியில் நடைபெறவேண்டும் எனச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 22ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுள் பிராதான தீர்மானமாக ஆசிரியர்களின் இடமாற்றங்கள் வருட இடைநடுவில் நடைபெறக் கூடாது எனவும், அவ்வாறு நடைபெற்றால் உரியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் இத்தகைய இடமாற்றங்கள் மிகமோசமாக நடைபெறுவதாகவும் மாகாணக் கல்வித் திணைக்களம் ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றங்களைப் புறக்கணித்து தமது இஸ்டத்துக்கு இடமாற்றங்களை வழங்குவதாகவும் தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் சுட்டிக்காட்டினர்.

2017ஆம் ஆண்டு இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் பெரிதும் ஏமாற்றப்பட்டதோடு பல தடவைகள் ஆசிரிய தொழிற் சங்கங்களை அழைத்து இடமாற்றச் சபையை நடத்திவிட்டு, இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலையும் வெளியிட்டுவிட்டு மாகாணக் கல்வித் திணைக்களம் இடமாற்றத்தை இரத்துச் செய்தது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இதற்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரே முழுக்காரணம் எனக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

ஆகையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்காவிட்டால் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் முன்பாகப் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ)

### நாளை

28.06.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : மூலம் பி.ப 1.07 வரை
திதி : பூரணை மு.ப 10.46 வரை
சுபநேரம் : 7.25 – 8.55 வரை
இராகுகாலம் : 1.25 – 2.55 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சார்ந்த குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறார் கபீர் ஹாஷிம்

கொழும்பு, ஜூன் 27

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவை சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு அரசு பதிலளித்துள்ளது.

இந்த நிதியங்களில் இருந்து 100 கோடி ரூபாவுக்கும் மேலதிகமான பணம் பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது என இலங்கை ம்னித உரிமைகள் கேந்திர நிலையம் குற்றஞ்சாட்டியிருந்தது.

சமீபத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.




இந்தக் குற்றச்சாட்டுக்களை முற்று முழுதாக நிராகரிக்கின்றோம் என நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பணம் பெறும் திட்டம் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இதற்காக விசேட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விடயத்தில் தமக்கு எதுவித தொடர்பும் கிடையாது என அமைச்சர் கூறினார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை இது பற்றிய தீர்மானங்களை மேற்கொண்ட சமயம் தாம் அமைச்சராகவும் இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

# நயினை நாகபூஷணிக்கு இன்று தேர்த்திருவிழா



நயினாதீவு, ஜூன் 27

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் வருடாந்த மஹோற்சவப் பெரு விழா ஆரம்பமானது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான பக்த அடியார்கள் அம்பாளின் தரிசனம் காண வருகைதருகின்றமை குறிப்பிடத்தக்கது.

13 ஆம் திருவிழாவான நேற்று பகல் கைலைக்காட்சியும், இரவு சப்பறத்திருவிழா நடைபெற்றன.

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களின் போக்குவரத்துக்களுக்கான வசதிகளை யாழ். மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நயினாதீவு ஆலய நிர்வாகத்தினர், பிரதேச செயலாளர்கள், கடற்படையினர், பொலிஸார், தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையினர், படகு உரிமையாளர்கள், சுகாதாரத் திணைக்கள அதிகா ரிகள் ஆகியோருடன் கலந்துரையாடி இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் மேலதிக பணியாளர்களை நீக்கத் திட்டம்

## நட்டத்தை ஈடுசெய்யும் வகையில் நடவடிக்கை

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் பணியாற்றும் மேலதிக ஊழியர்களை, சுய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிநீக்கம் செய்வது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய விமான சேவைகளின் நிதி நிலைமைகள் தொடர்பில் ஆராயும் குழு முன்வைத்த பரிந்துரை தொடர்பில் ஆராய்வதற்காக விமான நிறுவனம் விசேட பணிக் குழுவொன்றை அமைக்கவுள்ளது என்றும் குறிப்பிடப் படுகின்றது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுவதோடு, சுமார் ஆயிரம் ஊழியர்கள் 50 தொடக்கம் 55 வயதுக்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர் என விமான நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

தேசிய விமான சேவை, கடந்த மார்ச் மாதம் வரையில் 10 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் நட்டத்தை எதிர்நோக்கியிருந்தது.

இந்த நிலையில், விமான நிறுவனம் எதிர்நோக்கியுள்ள





நட்டத்தைக் குறைக்கும் வகையிலான, சீர்திருத்தங்கள் அடங்கிய முன்மொழிவுகளை விரைவில் முன்வைக்க எதிர்பார்க்கிறோம் என அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அல்லாவிடின், கடன்களுக்காகச் செலுத்தப்படும் வட்டி வீதமானது விமான நிறுவனத்தின் மொத்த நட்டத்துடன் சேர்க்கப்படும்' அபாயம் காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். இந்துவில் வெள்ளியன்று குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகம் நடத்தும் வருடாந்த குருதிக் கொடை முகாம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு, கல்லூரியில் இடம் பெறும்.

'உயிர் காக்கும் உன்னத பணி' யில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு இன்ரறட் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ

# மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –**

மலையாபருத்திக்குளம் கிராமம், காத்தர்சின்னக்குளம் கிராமம், அண்ணாநகர் கிராமம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

# பற்றைக்குள் இருந்து கைக்குண்டு மீட்பு!

திருகோணமலை, ஜூன் 27

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர், பம்மான் குளத்துக்கு அருகிலுள்ள பற்றைக்காட்டுக்குள் இருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த கைக்குண்டு நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டது என மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


பம்மான் குளத்துக்கு குளிப்பதற்காக சென்ற ஒருவர் கைக்குண்டொன்று கிடப்பதை கண்டு மூதூர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸாரால் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருவாசக அரண்மனை நாவற்குழியில் திறப்பு



நாவற்குழி, ஜூன் 27

யாழ்ப்பாணம் நாவற்குழியில் சிவபூமி திருவாசக அரண்மனை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவதட்சணாமூர்த்தி திருக்கோயிலின் மகா கும்பாபிகேப் பெரு விழா நேற்றுமுன்தினம் காலை சிறப்பாக நடைபெற்றது.

இலங்கையிலேயே முதன்முறையாக சிவதட்சணாமூர்த்திக்கெனத் தனியாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆலயம் இதுவாகும்.

சிவதட்சணா மூர்த்தியின் திருவுருவச் சிலை நான்கரை அடி உயரம் கொண்டதாகக் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலி நாணயத் தாள்களுடன் இருவர் கைது



கொழும்பு, ஜூன் 27

லுணுகம்வெகர, தெவ்ரம் வெகர பகுதியில் போலி நாணயத் தாள்களை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லுணுகம்வெகர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 5000 ரூபா நாணயத்தாள்கள் மூன்று பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அம்பலங்கொட மற்றும் தனமல்வில ஆகிய பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்ககள் திஸ்ஸ மஹாராம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# பாதாள குழுக்களுக்கு எதிராக முப்படையினர்

## இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

முப்படைகளின் உதவியுடன் பாதளஉலக குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜய வர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் பெற்ற பாதுகாப்புசபையின் கூட்டத்தில் இது குறித்து தீர் மானிக்கப்பட்டது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைதூக்கியுள்ள பாதளஉலகத்தவர்களின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்து மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# தம்பிலுவில் கலைமகள் வித்தியாலய இரண்டு மாடிக் கட்டடம் திறந்து வைப்பு

அம்பாறை, ஜூன் 26

திருக்கோயில் தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்தின் ஆரம்பக் கல்வி பிரிவுக்கான புதிய இரண்டு மாடி கட்டடம் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# தினசரி ராசி பலன் (27.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை சதுர்த்தித்திதி காலை 8.13 மணி வரை பின்னர் பூரணை. நட்சத்திரம்: கேட்டை காலை 9.35 மணி வரை பின்னர் மூலம். சித்தயோகம் காலை 9.35 மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 12.13 மணி முதல் 1.48 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.27 மணி முதல் 5.57 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆனி மாத வளர்பிறை பூரணை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - மூலம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** — யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். பிள்ளைகளால் கவலை உண்டாகும். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும். பெண்களின் சுப காரியங்கள் தடைப்படும்.

**ரிஷபம்** — மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும். பெண்கள் நகைகள் இரவல் வாங்கவோ, கொடுக்கவோ கூடாது.

**மிதுனம்** — உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். தொழிலில் வளர்ச்சி நன்றாக இருக்கும். சுயதொழிலில் செய்யும் பெண்களுக்கு விற்பனைப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு கிட்டும்.

**கடகம்** — சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகளால் களை கட்டும். விருந்தினர் வருகையால் களிப்பும், கலகலப்பும் உண்டாகும்.

**சிம்மம்** — சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். தொழிலில் நட்டம் ஏற்படும். தனியார் துறையில் கூடுதல் கவனம் செலுத்தி பணிபுரிய வேண்டிய நிலை அமையும். உடல் உபாதைகள் உண்டாகும்.

**கன்னி** — சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமாக இருக்கும். தேக சுகம் குடும்ப சுகம் சீராக இருக்கும். வியாபாரத்தில் போட்ட முதலீடுகளில் லாபம் குறையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டுவார்கள்.

**துலாம்** — நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படு. எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். சகோதர உறவு மேம்படும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** — மேன்மையான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். இவர்கள் பணி புரியும் இடத்தில் இவர்களுக்கென்று தனி மரியாதை இருக்கும். தொழிலில் முன்னேற்றமும், ஆதாயமும் அடைவார்கள்.

**தனுசு** — தீமையான நாள். வருமானம் குறையும். தேக சுகம் பாதிப்புறும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் குறையும். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் ஏமாற்றம் ஏற்படும்.

**மகரம்** — உயர்வான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். இதுவரை பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும்.

**கும்பம்** — சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் பட நேரலாம். வியாபாரம் மத்திம லாபத்தைத் தரும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கலாம்.

**மீனம்** — சுபீட்சமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப மகிழ்ச்சி அதிகரித்து சுபீட்சம் உண்டாகும். திருமண காரியங்கள் ஒப்பேறும். ஆடை, ஆபரண ஆடம்பரச் சேர்க்கை உண்டாகும்.

**சந்திராஷ்டம நாள்:** அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# நீண்ட தந்தங்களைக் கொண்ட யானைக்கு என்ன நேர்ந்தது?

கொழும்பு, ஜூன் 27

கலாவெவ தேசிய பூங்காவில் அண்மையில் இனந் தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நீண்ட தந்தங்களை கொண்ட யானைக்குத் தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்த பிரதி அமைச்சர் பாலித தெவர பெரும தற்போது அந்த யானை எங்கிருக்கின்றது என்பது தொடர்பான தகவல்கள்தன்னிடம்இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.



விரைவில் நீண்ட தந்தங்களைகொண்ட அந்த யானை எங்கிருக்கிறது என்பதை கலாவெவ தேசியப் பூங்கா அதிகாரிகளிடம் கேட்டு தெரியப்படுத்துகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கலாவெவ தேசிய பூங்காவில் 4.5 அடி நீளமுள்ள தந்தங்களைக் கொண்ட யான்னை ஒன்று காணமல் போயுள்ளது எனதெரிவிக்கப்படுகின்றமை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே வனஜீவராசிகள் பிரதி அமைச்சர், பாலித தெவர பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த யானை நாட்டுத் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்திருந்ததைப் பார்த்த அந்தப் பிரதேச மீனவர்கள், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து வைத்தியர் சந்தன என்பவர், அந்த யானைக்குத் தனது உயிரையும் பணையம் வைத்து. மருத்துவ உதவியளித்திருந்தார். நானும் இரண்டாவது தடவை அந்த யானைக்கு மருத்துவ உதவிகளை வழங்கும்போது தனிப்பட்ட ரீதியில் வைத்தியர்களுடன் சென்றிருந்தேன்.

மருத்துவ உதவிகள் தேவைப்படும் யானைகளை நிலத்தில் சாய்த்து மருத்துவ உதவிகளை வழங்கும் முறைமை இலங்கையில் இல்லாதிருக்கின்றது.

இதனால், இந்த யானைக்கு போதுமான மருத்துவ உதவிகள் வழங்கும் முடியாமலிருக்கின்றது.

யானைகள் நாட்டுத் துப்பாக்கிளைப் பயன்படுத்தியே அதிகம் கொலை செய்யப்படுகின்றன. இதற்கு எதிராக பொலிஸாரும் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்காது உள்ளனர்.

பொலிஸார் நடவடிக்கை எடுத்தால், யானைகள் படுகொலை செய்யப்படுவதை முற்றாகத் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நோயியல் துறையில் அதிசிறந்த சேவை: தாய்நாட்டுக்கு உழைத்தவர் சிவானந்தம்

## கொழும்பில் அவருக்கு கௌரவம்



நோயியல் துறையில் அதிசிறந்த சேவையாற்றி தாய்நாட்டுக்கு உழைத்தவர்கள் கௌரவிப்பு அண்மையில் பொரளை வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

சிறிலங்கா நோயியல் வைத்திய நிபுணர்கள் கல்லூரித் தலைவர் வைத்திய கலாநிதி பாலித ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மருத்துவ சேவைகள் சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளரும், ஆய்வுகூட பிரதிப் பணிப்பாளர் நாயகமும் ஆகிய வைத்திய கலாநிதி பி.வி.எச்.எஸ். பெரெரகம கலந்துகொண்டார்.

தாய்நாட்டுக்கு உழைத்த 17 சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்ட இந்த நிகழ்வில் அகில இலங்கை பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 10 தொழில் நுட்பவியலாளர்களும், 7 வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களும்கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாணத்தில் இருந்து ஆய்வுகூட பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.சிவானந்தமே கௌரவிக்கப்பட்டார். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 38 வருடங்கள் சுகாதாரத் திணைக்களத்திலும் 13 வருடங்கள் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் கடமையாற்றியுள்ளார். யாழ்.பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய காலத்தில் 2 பதவி உயர்வுகளைப் பெற்றுள்ளார். 1997 ஆம் ஆண்டு ஆய்வுகூட பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தராக இவர் பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஹெரோயினுடன் இருவர் கைது!

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத்தகவலுக்கிணங்க ஹெரோயின் வைத்திருந்த இருவர்கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களைகைதுசெய்யும் போது இவர்களிடமிருந்து சுமார் 17 கிராம் ஹேரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுன பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் இவர்களை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெல் அறுவடை கொள்வனவுக்கு 225 மத்திய நிலையங்கள் ஸ்தாபிப்பு

கொழும்பு, ஜூன் 27

சிறுபோக நெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக 225 மத்திய நிலையங்கள் நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்படவுள்ளன என நெல் சந்தைப் படுத்தும் சபையின் தலைவர் சட்டத்தரணி உப்பாலி மொகட்டி தெரிவித்துள்ளார்.





20 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வது இதன் இலக்காகும்.

கடந்த அரசின் நடவடிக்கைகள் காரணமாக 2009ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் நெல் சந்தைப்படுத்தல் சபை 715 கோடி ரூபா நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சோமாலியாவுக்கு இலவசமான முறையில் அரிசியை வழங்கியமை, நெல்லை கால்நடை உணவுக்காக ஒரு கிலோ 24 ரூபா என்ற அடிப்படையில் தனியார் துறைக்கு விற்பனை செய்தமை என்பன கடந்த அரசின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பிழையான தீர்மானங்கள் என்றும் உப்பாலி மொகட்டி சுட்டிக்காட்டினார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை இலாப மீட்டும் நிறு வனமாக மாற்றுவதற்கான அடித்தளம் தற்போது ஏற்படுத்தப்பட்



டிருக்கிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

# போதைப் பொருள் ஒழிப்பு வாரம் ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 27

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத்தினம் நேற்று முதல் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 1970 ஆம் ஆண்டு இந்தத் தினத்தை பிரகடனப்படுத்தியது.

போதைப் பொருள் பாவனையற்ற சர்வதேச சமூகத்தை கட்டியெழுப்ப தேவையான இலக்கை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளையும் ஒத்துழைப்புக்களையும் வலுப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத் தினத்திற்கு அமைவாக அபாயகர ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை நேற்று தொடக்கம் ஒரு வாரத்திற்கு போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை பிரகடனம் செய்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன என பேராசிரியர் சமன் அபேயசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கும், இளைஞர், யுவதிகளுக்கும், பெற்றோருக்கும் இது தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிமெந்து ஏற்றி வந்த லொறி மரத்துடன் மோதி விபத்து

சிமெந்து ஏற்றி வந்த லொறியொன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.


வாகரைப் பொலிஸ் பிரிவிலுள்ள மட்டக்களப்பு - திருகோணமலை வீதி கண்டலடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அந்த விபத்தில் லொறி சேதத்திற்குள்ளான அதேவேளை லொறிச் சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

உதவியாளரின்றி தனியே லொறியைச் செலுத்தி வந்த சாரதி தூக்கக் கலக்கத்தில் கட்டுப்பாட்டை மீறி லொறியை செலுத்தியமையால் வீதி மருங்கிலிருந்த பெரிய நாவல் மரத்தில் மோதுண்டது என ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாகரைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிரானில் விபத்து; மூவர் உயிரிழப்பு

## ஐந்து பேர் படுகாயம்



மட்டக்களப்பு , ஜூன் 27

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் சாரதி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஐவர் படுகாயமடைந்தனர் என்றும் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த அதிசொகுசு பஸ்ஸும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த வான் ஒன்றும் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கிரான், இலங்கை வங்கி கிளைக்கு முன்பாக விபத்துக்குள்ளாகியதில் அந்த இடத்திலேயே வான் சாரதி உயிரிழந்துள்ளமையுடன் மேலும் இருவர் பின்னர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த வானின் சாரதி நொச்சிமுனை விபுலானந்த வீதியைச் சேர்ந்த பா.வினோஜன் (வயது 25) எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# சித்திரவதைகளுக்கு உள்ளான மக்களுக்கு ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் சர்வதேச தினம்

கொழும்பு, ஜூன் 27

சித்திரவதைகளுக்கு உள்ளான மக்களுக்கு ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் சர்வதேசதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவும் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இவற்றில் தொடர் கலந்துரையாடலும் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் திரைப்பட விழாவும் அடங்கும்.

இந்த விழாவிற்குரிய திரைப்படக் காட்சிகள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி அரங்கில் இடம்பெறுகின்றன.

# வில்பிற்ற காட்டில் தேடுதல் வேட்டை!





மாத்தறை, ஜூன் 27

பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் இருவரைத் தேடி பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து வில்பிற்ற காட்டுப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதிரடிப் படையினருக்கும் பாதாள உலகக் குழுவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலின் போது பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த இருவர் இந்தக் காட்டுப்பகுதிக்குள் தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து வில்பிற்ற காட்டுப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாத்தறை கம்புறுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் மாலை பாதாள உலகக்குழுத் தலைவரான மாகந்துரே மதுஷின் உதவியாளர்களுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலகக்குழுத் தலைவரான மாகந்துரே மதுஷின் உதவியாளரான திலக் என்று அறியப்படும் மனில் ரோஹன என்பவர் உயிரிழந்தார்.

இந்த நிலையிலேயே சம்பவத்தின் போது மனில் ரோஹனவுடன் நின்ற இருவரே இந்தக் காட்டுப்பகுதிக்குள் தப்பிச்சென்றமை குறிப்பிடத்தக்கது.

# பராக்கிரம சமுத்திரத்தின் வனப்புக்கு அச்சுறுத்தலாகியுள்ள குப்பை பிரச்சினை

கொழும்பு, ஜூன் 27

வரலாற்று முக்கியத்துவமிக்க பொலன்னறுவை நகரத்திற்கு அழகு சேர்க்கும் பராக்கிரம சமுத்திரத்தின் அணைக்கட்டை அண்டிய பிரதேசத்தில் நீண்ட காலமாக இருந்து வரும் குப்பை பிரச்சினை அதன் வனப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் முறையற்ற வகையில் குப்பைகள் கொட்டப்படுவதன் காரணமாக குப்பைகள் தேங்கிக்கிடக்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

பொலன்னறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றுவதற்காக அங்கு சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் காலை உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பராக்கிரம சமுத்திரத்தை அண்டிய பகுதியில் இந்த கவலைக்கிடமான நிலையைக் கண்ணுற்றார்.

அதனைத் தொடர்ந்து உடனடியாக அவ்விடத்துக்கு உரிய அதிகாரிகளை அழைத்த ஜனாதிபதி, இந்த குப்பைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கையை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அந்தப் பிரதேசத்தில் உரிய முறையில் குப்பைத் தொட்டிகளை பொருத்துமாறும் முறையற்ற வகையில் குப்பைகளை வீசுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த நடவடிக்கை குறித்து தான் தொடர்ச்சியாக தொடராய்வுகளை மேற்கொள்ளவுள்ளேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வரலாற்று முக்கியத்துவமிக்க பராக்கிரம சமுத்திரத்தை பாதுகாத்து மக்கள் சுதந்திரமாகவும் ஆரோக்கியமான சூழலிலும் அதன் அழகைக் கண்டு களிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

பொசொன் மாதத்தை யொட்டி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வரலாற்று முக்கியத்துவமிக்க பொலன்னறுவை நகருக்கு வரும் மக்களுக்கு சௌகரியமான விதத்தில் அதன் சூழலை பேணி அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

# மீண்டும் கிட்டுப் பூங்காவாக பெயரிடவும் திலீபனின் சிலையை நிறுவவும் முடிவு

## யாழ். மாநகர சபை அமர்வில் தீர்மானம்

-எஸ்.நிதர்ஷன்-

யாழ்ப்பாணம், ஜூன் 27

நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு பின்புறமாக காணப்படும் தியாக தீபம் திலீபனின் சிலையை மீளவும் அதே இடத்தில் நிறுவுவதற்கும் யாழ் மாநகர சபைக்குட்பட்ட சங்கிலியன் பூங்காவாகவுள்ள கிட்டுப் பூங்காவை மீளவும் கிட்டுப் பூங்கா என பெயர் மாற்றுவதற்கும் நாவாந்துறையில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத் தூபியை நிறுவுவதற்கும் யாழ் மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபையின் ஆறாவது அமர்வு மாநகர மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடை பெற்ற போது சபையில் பல கட்சிகளினதும் ஆதரவு டன் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இதற்கான அனுமதிகளுக்காக மாகாண உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் போது தற்போது சங்கிலியன் பூங்கா என அழைக்கப்படும் கிட்டுப் பூங்காவை மீளவும் கிட்டுப் பூங்கா என பெயர் மாற்றப்பட்டு முன்னர் இருந்தமை போன்று மீண்டும் அதே இடத்தில் பூங்கா அமைக்கப்பட வேண்டுமென்றும் தியாக தீபம் திலீபனின் சிலையை முன்னர் இருந்த அதே இடத்தில் மீளவும் நிறுவ வேண்டுமென்றும் நாவாந்துறையில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத் தூபியை அதே இடத்தில் நிறுவ வேண்டுமென்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மணிவண்ணன் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின் போது ஈ.பி.டி.பியின் உறுப்பினர் குகேந்திரன் சிலைகள் அமைப்பது குறித்து கன்னி உரையிலேயே தெரிவித்திருந்தேன் என குறிப்பிட்டிருந்தார். அவ்வாறு சிலைகள் அமைப்பதற்கு தாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் தமது கட்சி அதனை ஆதரிப்பதாகவும் கூறினார்.

ஆனால் அரசியற் கட்சிகள் மற்றும் ஆயுத இயக்கங்களின் தலைவர்களுக்கும் சிலைகள் வைக்கப்பட வேண்டுமென்பதே தமது நிலைப்பாடு என்றார். மேலும் தனியே புலிகளுக்கு மட்டும் வைக்காது ஏனையவர்களுக்கும் வைக்க வேண்டும் என்றார்.

இதன் போது எழுந்த கூட்டமைப்பின் உறுப்பினர் தர்சானந் இங்கு யாருக்கும் புதிதாகச் சிலை வைக்கச் சொல்லி இந்தப் பிரேரணையில் கோரப்படவில்லை என்றும் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த சிலைகளையே மீளவும் நிறுவ வேண்டும் என்று கோரப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

மாநகர சபையின் கன்னி அமர்வின் போது சிலைகள் வைப்பது குறித்து உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர் என முதல்வர் ஆர்னோலட் குறிப்பிட்டார். தமிழ் இனத்திற்காக உன்னதமானதொரு தியாகத்தை செய்திருக்கின்ற தியாக தீபம் திலீபனின் சிலை இரண்டு தடவைகள் சிதைக்கப்பட்டிருக்கின்றது. அந்த சிலையை வைப்பது குறித்தே பேசப்படுகிறது. இங்கு யாருக்கும் புதிதாக சிலைகள் வைக்கப்படவில்லை என்றும் ஆர்னோலட் கூறினார்.

மேலும் திலீபனின் சிலையை வைக்க மாகாண சபையும் நடவடிக்கை எடுத்திருந்தது . ஆனால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந் நிலையில் தீலீபனின் சிலையை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகளை மாநகர சபையும் மேற்கொண்டுள்ளது. அதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. இதற்கமைய அடுத்த கட்டமாக அந்த வேலைகளை ஆரம்பிக்க இருக்கிறோம் என்றும் ஆர்னோலட் குறிப்பிட்டார்.

இதேவேளை சங்கிலியன் பூங்காவை கிட்டுப் பூங்காவாக மாற்றுவதற்கு சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஆகவே அதற்குரிய நிலைமைகளையும் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகளையும் முறைப்படி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் ஆர்னோல்ட் கூறினார். இதனையடுத்து மேற்படி தீர்மானங்கள் தொடர்பில் மாகாண உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பி வைத்து நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்து.

முன்னணியின் உறுப்பினர் கொண்டு வந்திருந்த இப் பிரேரணையையும் கூட்டமைப்பின் உறுப்பினர்களே வழிமொழிந்து தீர்மானமாக நிறைவேற்றியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கவனிப்பாரற்ற காணிகள் கையகப்படுத்தப்படும்

மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுமக்கள்பாவனையின்றிகவனிப்பாரற்று காணப்படுகின்ற காணிகளை மாநகர சபை தற்காலிகமாக கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாநகர மக்களின் பாதுகாப்பையும் மாநகரத்தின் தூய்மையையும் கருத்திற் கொண்டே மேற்படி நடவடிக்கையை மாநகர சபை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டள்ளது.

யாழ் மாநகர சபையின் அமர்வு மாநகர முதல்வர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் போது மக்கள் பாவனையில்லாது கவனிப்பாரற்று காணப்படுகின்ற காணிகளில் இருக்கின்ற பற்றைகளால் ஏற்படுகின்ற நோய்த் தாக்கம் உட்பட பொது மக்களுக்கு பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பது குறித்துச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து அவ்வாறு காணப்படுகின்ற காணிகளை மாநகர சபை தற்காலிகமாக பொறுப்பெடுப்பதென சபையின் உறுப்பினர்கள் அனைவரதும் ஆதரவுடன் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை தொடர்வதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத கட்டடங்கள்; கடுமையான நடவடிக்கை

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு எதிராக மாநகர சபை கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகர சபையின் அமர்வின் போது சட்டவிரோமாக அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதாவது மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டடங்கள் அமைப்பதாயின் மாநகர சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான அனுமதிகள் பெறப்படாது பல கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன என சபைக்கு பல தரப்பினர்களும் முறைப்பாடுகளைத் தெரிவித்திருக்கின்றனர்.

இந் நிலையில் அவ்வாறு அமைக்கப்படுகின்ற கட்டடங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதாவது அவ்வாறான சட்டவிரோத கட்டடங்களை பொது மக்களும் வணிக நிறுவனங்களைச் சார்ந்தோரும் அமைத்து வருகின்றனர்.

ஆகவே இவை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதற்கமையவே மாநகர சபை நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்வாறு சட்டவிரோதமாக கட்டடங்கள் கட்டுபவர்களில் வியாபார நோக்கில் கட்டுபவர்களுக்கு உடனடி நடவடிக்கையும் வழிபாட்டுத் தளங்கள் மற்றும் குடியிருப்புக்களைக் கட்டுபவர்களுக்கு நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே சட்டவிரோதமாக கட்டடங்களைக் கட்டியவர்கள் அதற்கான உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் அத்தகைய கட்டடங்களை இடித்தழிக்கும் செயற்பாட்டை மாநகர சபை முன்னெடுக்குமென முதல்வர் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

## யார் இன்று தலைவர்கள் என தடுமாறும் மக்கள் புலிகளையும் மறக்கும் நிலையில்

### மாகாண சபை அமர்வில் ரெமீடியஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளையும் மறக்கும் நிலையில் தான் தமிழ் மக்கள் உள்ளனர் எனத் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான முடியப்பு ரெமீடியஸ் புலிகளை தான் வணங்குவதாகவும் மதிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


யாழ் மாநகர சபையின் அமர்வின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தியாக தீபம் திலீபனுக்கு சிலை அமைப்பது மற்றும் சங்கிலியன் பூங்காவை கிட்டுப் பூங்கா என மாற்ற வேண்டுமெனக் கொண்டு வந்திருந்த பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலையே ரெமீடியஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்..

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் யார் தலைவர்கள் என்று தெரியாத நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மறக்கும் நிலையில் தான் அவர்கள் இருக்கின்றார்கள். ஆனாலும் நான் புலிகளை மதிக்கின்றேன். அவர்களை வணங்குகின்றேன். ஆகையினால் நான் இங்கு சொல்கின்ற விடயங்கள் எவரது மனதையும் புண்படுத்தினால் மன்னித்துக் கொள்ளவும் என்றார்.

ஒரு காலத்தில் திலீபனையே கொலை செய்ய வந்தவர்கள் இன்றைக்கு அரசியலுக்காக தீலீபனுக்கு மரியாதை செலுத்துகின்றார்கள். அவ்வாறு அவர்கள் மரியாதை செலுத்திவிட்டு அடுத்த நிமிடம் என்ன செய்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். அதிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன்பாக திலீபனின் நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செலுத்தி அஞ்சலிக்கின்றனர்.

அவ்வாறு அங்கு திலீபனுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு அடுத்த நிமிடம் அவரின் அத்தனை கொள்கைகளுக்கும் மாறாக இலங்கையின் சட்ட திட்டங்களுக்கமைய பதவிப்பிரமாணங்களைச் செய்கின்றனர். அதே போன்று தான் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றும் பதவிப்பிரமாணம் செய்கின்றனர்.

இதே வேளை சிலைகள் வைப்பது தொடர்பில் எமது கட்சி உறுப்பினர் குகேந்திரன் அனைவருக்கும் சிலைகள் வைக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார். ஆகவே ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தலைவர்களாக இருந்த சிறிசபாரத்தினம், பத்மநாபா ஆகீயோரையும் துரோகிகள் என்று கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.- என்றார். (இ-7)



இன்று (ஜூன் 27) உலக நீரிழிவாளர் தினம்

# நீரிழிவை கட்டுக்குள் வைத்திருப்பது எப்படி?

நீரிழிவு சர்க்கரை வியாதி என்ற உடனேயே இன்று பெரும்பாலானோர் பயத்தில் மூழ்கிவிடுகின்றனர். அக்காலத்தில் இயற்கைக்கு உகந்த உணவை உண்டு வந்தனர். ஆகையால் சர்க்கரை நோய் அவர்களைத் தாக்கவில்லை, இன்று நாம் பலவகையான உணவுப் பொருள்களை உட்கொள்கிறோம் .

ஆகவே எளிதில் சர்க்கரை வியாதிக்கு ஆளாகி விடுகிறோம் என்றும் சிலர் கூறுவார்கள். மனிதர்களுக்கு நாகரிகம் வளர வளர வசதிகள் பெருகுகின்றன. ஆகவே நாகரிக ஓட்டத்திற்கு ஏற்ப நாமும் மாறிக் கொள்கிறோம். உடலும் தன்னை மாற்ற முயல்கிறது. இதுதான் பரிணாம வளர்ச்சி என்று கூறுகிறோம்.

கடந்த 200 ஆண்டுகளில் பல உயிர்க்கொல்லி நோய்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடி இருக்கின்றன. இதற்குக் காரணம் மருத்துவத் துறையின் வளர்ச்சி. உடலில் உள்ள சர்க்கரை அளவை நிரந்தரமாக கட்டுக்குள் கொண்டுவருவதற்கும் உலகமெங்கும் உள்ள மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து கொண்டு வருகின்றனர். அந்தவகையில் நீரிழிவாளர்கள் எத்தகைய உணவை உண்ண வேண்டும்? எவ்வளவு உண்ண வேண்டும்? இவைதான் நீரிழிவாளர்கள் அறிய விரும்புகிற முக்கிய விடயமாக இருக்கிறது.

இன்றைய் நிலையில் நீரிழிவாளர்களுக்கு எனத் தனியான உணவுத் திட்டம் என எதுவுமே கிடையாது எனச்



## அன்று இயற்கைக்கு உகந்த உணவை உண்டோம்!

சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் அதுதான் உண்மை.

நீரிழிவாளர்கள் சீனி சேர்க்கக் கூடாது. சோறைத் தவிர்க்க வேண்டும். அரிசி கோதுமை ஆகிய மாப் பொருள்களால் செய்யப்படும் இடியப்பம், பிட்டு, அப்பம், நாடில்ஸ் போன்ற சிற்றுண்டிகளை குறைந்தளவே உண்ண வேண்டும் என்பதே பெரும்பாலான நோயாளர்களின் எண்ணமாக இருக்கிறது.

பல மருத்துவர்களும் இதையே நோயாளர்களுக்கு ஆலோசனையாகக் கூறுகிறார்கள்.

**தற்போதைய கருத்து**

இப்பொழுது உலகளாவிய ரீதியில் மருத்துவர்களாலும், உலக சுகாதார ஸ்தாபனம் போன்றவற்றாலும் சிபார்சு செய்யப்படும் உணவுமுறை என்ன சொல்கிறது?

★ கொழுப்பு, சீனி, உப்பு ஆகியன குறைந்தளவும்

★ பழங்களும் காய்கறிகளும் அதிகம் கொண்டதுமான

★ ஆரோக்கியமான சமவலுவுள்ள (balanced) உணவையே ஆகும்.

★ எதையும் முற்றாகத் தவிர்க்கச் சொல்லவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

கொழுப்பு என்றால் என்ன? எண்ணெய், பட்டர், மாஜரின் போன்ற அனைத்துப் பொருள்களும், அவை சார்ந்த உணவுகளாகும். சீனி கூடத் தவிர்க்கப்படவேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அவற்றை உணர்வுபூர்வமாக அணுகாது, புத்திபூர்வமாக அளவோடு உணவில் சேர்க்கலாம்.

**பொதுவான ஏனைய ஆலேசனைகள் என்ன?**

★ உணவில் மாப்பொருள் உணவு பெரும்பகுதியாக இருக்க வேண்டும்.

★ மாப்பொருள் உணவுகளைத் தேர்ந்தெடுக்கும்போது கிளைசீமிக் இன்டெக்ஸ் (Low GI) குறைவான உணவுகள் முக்கிய இடம் பெறுவது நல்லது. கிளைசீமிக் இன்டெக்ஸ் என்பது குறிப்பிட்டளவு ஓர் உணவை தனியாக உண்ணும்போது சீனியின் அளவு எவ்வளவு அதிகரிக்கிறது என்பதை பற்றிய ஒரு கணக்கீடு ஆகும்.

கிளைசீமிக் இன்டெக்ஸ் அதிகமுள்ள உணவுவகைகளைத் தவிர்க்கவும். அதிலும் முக்கியமாக பிரதான உணவுகளுக்கு இடையேயான குறுந்தீனிகளைத் தவிர்ப்பது நல்லது. அவற்றிற்குப் பதிலாக ஒரு பழம் சாப்பிடலாம்.

★ காலை உணவை ஒருபோதும் தவிர்க்க வேண்டாம்.

★ உணவுகளை வேளைக்கு வேளை சாப்பிட வேண்டும். உணவுகளைத் தப்ப விடுவது கூடாது.

★ விரதம் இருப்பது கூடாது.

★ எண்ணெய், நெய், பட்டர், மாஜரின் போன்றவற்றை உண்பதில் அவதானம் தேவை. ஹைரஸன் ஏற்றப்பட்ட மாஜரின் வகைகள் கூடாது. ஒலிவ் ஓயில், சூரிய காந்தி எண்ணெய், சோள எண்ணெய், நல்லெண்ணய் போன்றவை நல்லது, ஆயினும் தேங்காய் எண்ணெய், பாம் எண்ணெய் தவிர்க்கப்பட வேண்டியது அல்ல. அளவோடு பாவிக்கலாம்.

★ ஒரு முறை பொரித்த எண்ணெயை வீசிவிட வேண்டும். மீண்டும் மீண்டும் அதே எண்ணெயை உபயோகிக்கக் கூடாது.

★ பால் அருந்தும்போது கொழுப்பு குறைந்த அளவுள்ள பாலைத் தேர்ந்தெடுங்கள். யோகர்ட் போன்றவற்றை உண்ணும்போதும் அவ்வாறே குறைந்த கொழுப்புள்ளதையே தேர்ந்தெடுக்கவும்.

★ பொரித்த, பொதியில் செய்யப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவும்.

★ துரித உணவுகளைத் (Fast food) தவிருங்கள். கட்லட், ரோல்ஸ், பிட்ஸா, சமோசா, ஹம்பேகர், பிரன்ஸ் ப்ரை, பிஸ்கற், வடை, சூசியம், சொக்லற் கேக், வனிலா கேக் போன்றபலவும் அடங்கும்.

★ இறைச்சியைத் தேர்ந்தெடுக்கும் போது கொழுப்பு குறைந்தவற்றையே உண்ணுங்கள். ஆடு, மாடு, பன்றி போன்றவற்றுக்குப் பதிலாகக் கோழி உண்ணலாம். அதிலும் கொழுப்புள்ள பகுதியை நீக்குங்கள்.

★ மதுபானம் அதிகம் கூடாது. இனிப்புள்ள மென்பானங்கள் கூடாது. ஆனால் போதிய நீராகாரம் எடுங்கள்.

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம்

## இன்று கண்டதையும் அள்ளி வயிற்றை நிரப்புகிறோம்!



நீரிழிவாளர்கள் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் ஆரோக்கியமாகவும் இருக்க முடியும்.

**(இக் கட்டுரைக்கான தரவுகள் பிரித் தானிய சுகாதாரச் சேவையினரின் பரிந்துரையை ஆதாரமாகக் கொண்டவை ஆகும்.)**

### கொக்குவிலில் கடை மீது தாக்குதல்:

# வழக்கில் ஒருவர் விடுவிப்பு; மேலும் இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 27

கொக்குவிலில் ஹாட்வெயர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கில் அதன் உரிமையாளரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு புறநடையாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் கட்டளையிட்டது.

அத்துடன், வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேலும் இரண்டு சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்கி நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் உள்ள ஹாட்வெயார் ஒன்றின் மீது கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி பிற்பகல் அடாவடிக் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியிருந்தது.

தாக்குதலையடுத்து 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 6 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய இரண்டு பேரும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கொக்குவில் சந்தியில் நண்பனின் பிறந்த நாளைக் கேக் வெட்டிக் கொண்டாடியபோது ஏற்பட்ட தகராறை அடுத்தே ஹாட்வெயர் மீது தாக்குதல் நடத்தினோம் என சந்தேகநபர்கள் தெரிவித்தானர் எனப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் அனைவரும் மோட்டார் சைக்கிளில் வந்தனர் என முறைப்பாட்டாளர் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். எனினும் அந்த இடத்தில் சைக்கிளில் நின்ற இரண்டாவது சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரைப் பொலிஸார் கைது செய்து குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர் என்று அந்த சந்தேகநபர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி வி.ரி. சிவலிங்கம் மன்றில் கூறியிருந்தார்.

இரண்டாவது சந்தேகநபர் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை ஆராய்ந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் 2 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். ஏனைய சந்தேகநபர்கள் 6 பேரும் மன்றில் முன்னிலையாகினர்.

இரண்டாவது சந்தேகநபர் தொடர்பான உறுதியான சான்று இல்லை என்பதைப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

அதனால் இரண்டாவது சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுவித்து நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்களையும் பிணையில் விடுத்து நீதிமன்று கட்டளையிட்டது. (ஐ-7)

# இலங்கையர் 8 பேர் கைது



துருக்கிக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைய முற்பட்ட 8 இலங்கையர்களை ஜோர்ஜியா பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.


இந்த 8 இலங்கையர்களும் எஜாரா எல்லையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த நாட்டின் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.


சட்டவிரோதமான குடியேற்றத்தில் ஈடுபட்ட இலங்கையர்களுக்கு அந்நாட்டுச் சட்டத்தின்படி 4 அல்லது 5 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படலாமென அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இலங்கையர்களிடம் ஜோர்ஜியா குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் கூறப்பட்டது. (ஐ)




## சரியான நிழலைக் கண்டுபிடியுங்கள்



# நீர்பறவைகளும் பூங்கொடிகளும்

ஓர் ஊரில் ஒரு குளம் இருந்தது, அந்தக் குளம் நிறையத் தண்ணீர் இருந்தது. தண்ணீர் நிறைந்திருந்த தால் அந்தக் குளம் மிக அழகாக விளங்கியது. அந்தக் குளத்தில் கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற நீர்ப் பூங்கொடிகள் இருந்தன. கொக்கு நாரை போன்ற நீர்ப்பறவைகளும் இருந்தன.

எல்லாம் ஒரு குடும்பம் போல் ஒன்றாக வாழ்ந்து வந்தன. அந்தக் குளம் தன் உறவினர்களான பூங் கொடிகளுக்கு வேண்டிய அளவு தண்ணீர் குடிக்கக் கொடுத்து உயிர் வாழ்ச் செய்தது.

அதுபோலவே, அன்புடன் தன்னி டமுள்ள மீன்களையும் நண்டுக ளையும் நீர்ப்பறவைகளுக்கு உண வாகக் கொடுத்து உறவாடிக் களித் தது.

ஓர் ஆண்டு உரிய காலத்தில் மழை பெய்யவில்லை. ஊரே வறண்டு போய் விட்டது. பயிர் பச்சைகளும் விளைய வில்லை. அந்த குளத்தில் இருந்த நீரும் சிறுது சிறிதாக வற்றி, கடைசி யில் அடித்தரையும் காய்ந்து போய் விட்டது.

இனி அந்த குளத்தில் தங்களுக்கு உணவு கிடைக்காது என்றறிந்த பற வைகள் வேறு நீருள்ள குளத்தை நாடிப் பறந்து சென்று விட்டன.

நீர்ப் பூங்கொடிகளில் சின்னஞ் சிறிய கொடி ஒன்று, மற்ற பூங்கொடி களைப் பார்த்து, இந்தக் குளத்திலேயே நாம் இனியும் இருந்தால் காய்ந்து கருக வேண்டியதுதான். நீர்ப் பறவை களை போல் நாமும் வேறு எங்காவது போய் விட்டால் என்ன? என்று கேட் டது.

அதற்குப் பெரிய பூங்கொடி ஒன்று பதிலளித்தது:

இந்தக் குளம் நீர் நிறைந்திருந்த போது தாயைப்போல நம்மை ஆத ரித்துக் காப்பாற்றியது.

நீர்ப்பறவைகள் சிறிதுகூட நன் றியில்லாமல் துன்பம் வந்த காலத்தில் பறந்து போய்விட்டன. நாம் நன்றியற் றவர்களாக நடந்து கொள்ளக்கூடாது. காய்ந்து கருகினாலும் இந்தக் குளத் திலேயே கிடந்து சாக வேண்டியது தான். அதற்கு வந்த துன்பம் நமக்கும் வரட்டும் என்று பங்கு கொள்வதுதான் உறவு என்று கூறியது. எல்லாப் பூங் கொடிகளும் அதன் கருத்தை ஒப்புக் கொண்டன.

குளத்தின் வறண்ட கரையிலேயே அவை ஒட்டிக் கிடந்து தங்கள் உறவை நிலை நிறுத்தின.

**கருத்துரை:** வறுமை ஏற்பட்ட காலத்தில் நீர்ப் பறவைகள் போல் பறந்து செல்பவர்கள் உறவினரல்லர். பூங்கொடிகள் போல் ஒட்டிக் கிடந்து பங்கு பெரும் இயல்பினரே உண்மை யான உறவினராவர்.


# கல்விக் கதிர் வெளியீடு



## நிறம் தீட்டலாம் வாங்க



## 5 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்




## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

1 + 1 + 1 + 1 + 1

0 × 1 + 1 + 1

1 × 0 = ?

# அரசியலில் ஒருபோதும் ஈடுபடேன்: உறுதி கூறுகிறார் ஞானசார தேரர்



கொழும்பு, ஜூன் 27

அரசியலில் நான் ஒருபோதும் ஈடுபட மாட்டேன். இதனை நான் இந்த நாட்டு மக்களிட மும், விசேடமாக மகா சங்கத் தினரிடமும் வாக்குறுதியாகக் கூறிக் கொள்கின்றேன் என பொதுபல சேனா வின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு தனியார் தொலைக்காட்சி சேவையொன்றில் இடம்பெற்ற நேரடி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே தேரர் இதனைக் கூறியுள்ளார்.

இதன் கருத்து, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் தாங்கள் எந்தவொரு கட்சிக்கும் சார்பாக, எந்தவொரு கருத்தையும் வெளியிடும் நடவடிக்கையிலும் கலந்துகொள்ள மாட்டீர்கள் என்பதாகக் கொள்ளலாமா? என தேரரிடம் ஊடக வியலாளர் வினவினார்.

அரசியலில் ஈடுபட்டு ஒரு கட்சியின் வாக்குப் பலத்தை உடைப்பது தேரராக இருந்து செய்ய முடியுமான ஒரு நடவடிக்கை அல்ல என தேரர் பதிலளித்தார்.

தங்களுக்கு இராஜயோகம் ஒன்று இருப்பதாக தங்களது அமைப்பின் தேரர் ஒருவரே கூறியிருந்தார் என தேரரிடம் ஊடகவியலாளர் கூறியபோது,

ஒரு விகாரையின் விகாராதிபதியாக வருவதும் இராஜயோகம் தான். பாடசாலையின் அதிபராக வருவதும் இராஜயோகம்தான். இருப்பினும், அரசியல் எமக்குரிய இடமல்ல என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன்.

நாம் அரசியல் வாதிகளுக்கு சமமாக இருக்கக் கூடியவர்கள் அல்லர். மாறாக, அரசியல்வாதிகளுக்கு ஆலோசகர்களாகவே இருக்க வேண்டும். எமக்கு அரசியல்வாதிகளுடன் கலந்துரையாட எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன.

இந்த நாட்டின் கல்வி, சுகாதாரம், கலாசாரம் என்பன வீழ்ச்சியடைந்துள்ளன. மனிதர்களுக்கு இந்த நாடும் அரசியலும் வேண்டாத ஒன்றாக மாறியுள்ளது.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது இந்த நாட்டை விட்டும் செல்வதற்கு மக்கள் தயாராகவுள்ளனர். ஒரு தொகுதி மக்கள் உண்ணும்போது, இன்னுமொரு தொகுதி மக்கள் உண்ண வழியில்லாதிருக்கின்றனர். அனைத்தும் மாறியுள்ளன. இவற்றுக்கே நாம் தீர்வு தேட வேண்டியுள்ளோம்.

தேரர்கள் என்ற வகையில், நாம் ஆன்மீக ரீதியிலான தலைமைத்துவத்தை வழங்க வேண்டியவர்கள் எனவும் தேரர் மேலும் குறிப்பிட்டார்.

# ரூபாவின் பெறுமதியில் தற்போது அதிகரிப்பு



கொழும்பு, ஜூன் 27

இலங்கை ரூபாவின் பெறுமதியில் தற்போது சற்று அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. கடந்த வாரம் வரை டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 161 ரூபாவையும் தாண்டி வீழ்ச்சியடைந்து சென்று கொண்டிருந்தது.

அந்நியச் செலாவணி குறைவு, அந்நிய முதலீடுகள் வீழ்ச்சி என்பனவும் இதற்கான காரணங்களாக கூறப்பட்ட போதும், இதன் காரணமாக எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்திருந்ததுடன் இறக்குமதிப் பொருள்களின் விலையும் அதிகரிக்க நேர்ந்திருந்தது.

இந்த நிலையில், தற்போது டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 160 ரூபாவரை முன்னேற்றம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

இன்று பொஸன் நோன்மதி தினத்தில்

# அ'புர புனிதப் பிரதேசத்துக்கு லட்சக்கணக்கான அடியார்கள்



அனுராதபுரம், ஜூன் 27

பொஸன் போயா தினமான இன்று பத்து லட்சம் அடியார்கள் அனுராதபுரம் புனிதப் பிரதேசத்திற்கு வந்து சேர்வார்கள் என அனு ராதபுர மாவட்ட செயலாளர் ஆர்.எம். வன்னிநாயக்க நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

அடியார்களுக்குத் தேவையான சகல வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. 200 இற்கும் அதிகமானதான நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன என அவர் கூறினார்.

இதேவேளை, இரண்டாயிரத்திற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். நேற்றுக் காலை மூன்று ரயில்கள் கொழும்பிலிருந்து அனுராதபுரத்திற்கான பயணத்தை மேற்கொண்டுள்ளன.

இன்றைய தினத்திலும் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.




# அன்னை நாகபூஷணி தேரேறி வரும் காட்சியை கண்டு பூரிப்போம்!

சிவலிங்கத்தை அணைத்தபடி அன்னையவள் நாக பூசணி நாகக் குடை நிழலில் அமர்ந்திருக்கும் திருத்தலமே நயினை நாக பூஷணி அம்மன் ஆலயம்,,அம்பாள் நாக குடைநிழலில் இருந்து அருள் பார்வை பார்க்க சிவன் தாண்டவம் ஆட உலகம் இயங்குகின்றது.


ஈழத்தின் ஆதிகுடிகளான நாகர்கள் நாகலோகத்தின் அழிவின் பின்னர் அதன் எஞ்சிய பகுதியான ஈழத்தின் யாழ்ப்பாண தீபகற்பத்திலும் இலங்கையின் முழுமையான மேற்கு கரையோர பகுதிகளிலும் இந்தியாவின் முழுமையான கிழக்கு கரையோர பகுதிகளிலும் வாழ்ந்தார்கள் என்றும் பல நூல்களில் வரலாறுகள்காணப்படுகின்றன.

இந்த நாகர்களே ஈழத்தின் முதல் குடிகள் என்றும் கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம், மாந்தை மாண் மியம் போன்ற புராண இதிகாச வரலாற்று நூல்களை ஆதாரமாக மேற்கோள் காட்டிய வரலாறுகள் கூறுகின்றன. இவர்கள் இயற்கை வழிபாட்டோடு நாகபாம்பினை வழிபடும் மரபினை தம் வழிபாட்டு முறைகளில் கொண்டு இருந்தார்கள்.

இன்று நாகபூசணி அம்மன் இருக்கும் மணித்தீவில் வெண்மையான நிறம் கொண்ட நாகங்கள் பெண் தெய்வத்தை மலர்தூவி வணங்கினர் என்றும் இதை கண்ட நாகர்கள் மரங்கள் இலைகள் தளைகளால் நிழல் அமைத்து தாமும் அம்பிகையை ,மலர்தூவி வழிபடும் மரபினை மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

நாகங்கள் பெண் தெய்வத்தை வணங்கும் இந்த வணக்க முறை இன்றும் நயினாதீவு என்கின்ற புனித மண் ணில் இல்லாமல் இல்லை.எம்பிரான் நாக தம்பிரான் புளியம் தீவில் அதிகாலையில் துயில் எழுந்து நந்த வனத்தில் மலர் பறித்து நாக உருவெடுத்து பாம்பன் கடலை நீந்தி கடந்து நயினை யில் கருவறையில் உறையும் தேவியின் பூங்குழலில் மலர் சூடி விட்டு இன்றைய கல்யாண மண்டப கட்டட பகுதியில் உறைந்து கொள்கிறாா்.ஐயர் அதிகாலையில் கருவறை கதவை திறக்கும் பொழுதே அன்னை மலர்சூடிய மாதேவியாக பேரொளியோடு மலர்ந்த முகத்தோடு வரவேற்கின்றாள்.இது கடந்த காலங்களில் நடந்த உண்மை சம்பவங்கள்.

பூட்டபட்ட கருவறைக்கு நாகம் எவ்வாறு போனது தீர்த்த கோமுகி சிறு த்வாரத்தால் வந்து இருக்குமா



என்று ஆராய்ச்சிகூட செய்தார்கள்.

பிரபஞ்சத்தை படைத்து காத்து அருளுபவள் தீய சக்திகளை அழிக்க திருத்தேரில் ஏறி நயினையில் உலா வரும் நாள் இன்றைய நாள்.

இன்றைய நாளில் சோழககாற்றில் அசைந்தாடி பேரொலி எழுப்பி எழுவதும் வீழ்வதுமாக இருந்த ஏழாத்து பிரிவு அலைகள் கூட இன்று ஏகமனதாக சமாதானம் செய்து அமைதியாகி யாழிலும் அயல் தீவுகளிலும் இருந்து அம்பாளை வணங்க வரும் அடியவர்கள் படகுகளுக்கு அமைதியான கடல் அன்னையையாக இருந்து ஆதரவு கொடுக்கும். ஆம் இன்று அன்று கடலில் மூழ்கிய பர்வதவர்த்தினி கோவிலின் முத்து தேர் பவளத் தேர் செப்புத் தேர் ஆகிய தேர்களிலும் அம்பாள் கடல் வலம் வரும் நாள் அல்லவா!

வானில் காற்றில் அசைந்து சிறகசைத்து நூற்றுக்கணக்கான கருடப் பறவை அம்பாளின் திரு வீதி உலா வர,அகிலத்தை ஆளும் நாக ராஜ ராஜேஸ்வரி அழகிய திருக்கோலத்தில் எழுந்தருளி வெண் குதிரைகள் பூட்டிய தேரில் பார்க்கும் இடமெல்லாம் நிறைந்து நிற்கும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் அரோகரா ஒலி எழுப்ப திருவீதி உலா வர போகின்றாள். ★

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி:

# வெற்றியை கொண்டாடிய மெக்சிகோ ரசிகர்கள் 16 பேர் சுட்டுக்கொலை!




மெக்சிகோ, ஜூன் 27

உலகக் கிண்ண உதைபந்து போட்டியில் தென்கொரியாவை வீழ்த்திய மகிழ்ச்சியை கொண்டாடிக்கொண்டிருந்த மெக்சிகோ ரசிகர்கள் மீது மர்ம நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியின்போது, தென்கொரிய அணியை 2–1 என்ற கோல் கணக்கில் மெக்சிகோ அணி வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியை மெக்சிகோ நாட்டில் ரசிகர்கள் பலர் வீதிகளில் கொண்டாடியுள்ளனர்.

அதேநேரத்தில்டெக்சாஸ் எல்லை பகுதியில் உள்ள ஒரு கார் திருத்துமிடத்தில் 6 பேர் உதைபந்தாட்ட போட்டியை பார்த்து கொண்டிருந்தனர். அதன்போது திடீரென காரில் துப்பாக்கிகளுடன் வந்திறங்கிய மர்ம நபர்கள், 6 பேர் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்று விட்டனர். இதில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதற்கிடையில், மற்றொரு பகுதியில் கடை ஒன்றில் போட்டியை கண்டுகளித்த கடையின் உரிமையாளர்கள் இருவர் மற்றும் வாடிக்கையாளர்கள் 3 பேர் என, 5 ரசிகர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்பின் நள்ளிரவில் 4 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்வடைந்துள்ளது.

மெக்சிகோ அணி வெற்றி பெற்ற 24 மணி நேரத்தில் இடம்பெற்ற 16 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பொலிஸார் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ரசிகர்கள் கொலை குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இரண்டு நபர்கள் மட்டுமே என்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (க)


## அணை பாதுகாப்பு பிரேரணை; எதிர்த்து தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்!

மத்திய அரசின் அணை பாதுகாப்பு பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டசபையில் நேற்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த தீர்மானம் எதிர்ப்பு இன்றி நிறைவேறியது.

மாநில அணைகளை பாதுகாப்பதற்காக மத்திய அரசு அணை பாதுகாப்பு சட்டம் ஒன்றை அறிவித்தது. அதற் கான பிரேரணை 13.6.2018 அன்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு தமிழகத்தில் தி.மு.க. உட்பட பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில், மத்திய அரசின் அணை பாதுகாப்பு பிரேரணையை எதிர்த்து தமிழக சட்டசபையில் நேற்றுத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

தீர்மானத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்மொழிந்தார். அவர் பேசும்போது, மாநில அரசின் உரிமைகள் இந்த சட்டம் மூலம் பறிக்கப்படுகின்றன எனவும், இந்த பிரேரணையை சட்டமாக்குவதை உடனே மத்திய அரசு நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



மேலும், அனைத்து மாநிலங்களுடனும் மத்திய அரசு கலந்து ஆலோசித்து ஒருமித்த கருத்து ஏற்பட்ட பின்னர் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் எனவும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி முன்மொழிந்த தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் இந்தத் தீர்மானம் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

# ராமேஸ்வரத்தில் குண்டுகள் மீட்பு; டில்லி அதிகாரிகள் விசாரணை



ராமேஸ்வரம் அருகே கைப்பற்றப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள், வெடிகுண்டுகள் தமிழ் ஈழ விடுதலைப் புலி போராளிகளால் பதுக்கி வைக்கப்பட்டவை எனத் தெரிய வந்தமையால் டில்லி, சென்னையைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்த ராமேஸ்வரம் விரைந்துள்ளனர்.

ராமேஸ்வரம் அருகே கடற்கரை கிராமமான தங்கச்சிமடத்தில் ஆயுத குவியல் சிக்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மீனவர் எடிசன் என்பவரது வீட்டின் பின்புறம் அந்த ஆயுதக் குவியல் சிக்கியுள்ளது.

400 அதிநவீன கை எந்திர துப்பாக்கிக் குண்டுகள், 5 ஆயிரத்து 500 சிறிய துப்பாக்கிக் குண்டுகள், 4 ஆயிரத்து 928 எஸ்.எல்.ஆர். ரக துப்பாக்கிக் குண்டுகள், 199 அடுக்கடுக்கான செனைட்டர் சிலாஸ் குண்டுகள், 20 எம்.5-302 ரக துப்பாக்கிக் குண்டுகள், 87 சிக்னல்ஸ் ரவுண்ட் குண்டுகள் என 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் இருந்தன.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் மற்றும் வெடிகுண்டுகள் பூமியில் புதைக்கப்பட்டு சுமார் 30 முதல் 35 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இலங்கையில் தமிழ் அமைப்புகளுக்கும், இலங்கை அரசுக்கும் நடைபெற்ற போரின் போது 1983 ஆம் ஆண்டு தமிழகத்தில் தமிழ் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ராமேஸ்வரம், தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளில் பிரபாகரனின் விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்பட பல்வேறு தமிழ் ஈழப் போராளிகள் பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலைக்குப் பின் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் பயிற்சி நிறுத்தப்பட்டு போராளிகள் 'திருப்பி அனுப்பப்பட்டனர்.

அப்போது அவர்கள் தங்கள் கைவசம் வைத்திருந்த துப்பாக்கி குண்டுகள் மற்றும் ஆயுதங்களை மண்ணில் புதைத்து சென்று இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# ஆப்கனில் தற்கொலை படையினர் நடத்திய தாக்குதலில் 8 பேர் பலி

காபூல், ஜூன் 27



ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்குப் பகுதியில் தற்கொலைப்படை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேர் உடல் சிதறி பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது குனார் மாகாணம். இங்குள்ள காவல் நிலையச் சோதனைக்கு வெளியே தற்கொலைப்படை பயங்கரவாதிகள் திடீர் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பரிதாபமாக இறந்தனர். இந்த தாக்குதலில் பலியானவர்கள் குறித்த விவரம் தெரியவில்லை. மேலும், 4 பேர் படுகாயம் அடைந்தனர். இதையடுத்து, அங்கு விரைந்து சென்ற பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

# துருக்கி ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ள எர்டோகனுக்கு பிரிட்டன் பிரதமர் வாழ்த்து

லண்டன், ஜூன் 27



துருக்கி ஜனாதிபதியாக தொடர்ந்து இரண்டாவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள தாயிப் எர்டோகனுக்கு பிரிட்டன் பிரதமர் தெரசா மே வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

550 இடங்களைக் கொண்ட துருக்கி நாட்டு நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்த நிலையில், வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்றது.

அதில், 52.5 சதவீதத்துக்கும் மேல் வாக்குகள் பெற்று தாயிப் எர்டோகன் வெற்றி பெற்றுள்ளார் என அந்த நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் துருக்கியின் ஜனாதிபதியாக தொடர்ந்து இரண்டாவது முறை பதவியேற்க உள்ளார் எர்டோகன்.

இந்த நிலையில், தேர்தலில் வெற்றி பெற்ற தாயிப் எர்டோகனுக்கு பிரிட்டன் பிரதமர் தெரசா மே வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில்-

துருக்கி ஜனாதிபதியாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ள எர்டோகனுக்கு வாழ்த்துக்கள். பிரிட்டன் மற்றும் துருக்கி இடையிலான இருநாட்டு உறவுகளை பலப்படுத்துவதற்கு இணைந்து செயல்படுவோம்.

மேலும், பிராந்திய பகுதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சிரியாவில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு தேவையான ஒத்துழைப்பு அளிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் றிசாத் பதியுதீன் - சத்தியலிங்கம் முறுகல்



வவுனியா மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சரும், மாவட்ட இணைத்தலைவருமான றிசாத் பதியுதீன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகிய இருவருக்கும்இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு மற்றும் வடக்கின் அபிவிருத்தி பிரதி அமைச்சர் கே.கே. மஸ்தான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. இதன் போதே முறுகல் ஏற்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை வீட்டுத்திட்டம் வழங்கி குடியமர்த்துவது தொடர்பில் விவாதிக்கப்பட்டபோது முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களே அதிகம் இடம்பெயர்ந்தனர் என்றும் அவர்களை குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் றிசாத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தமிழ் மக்களும் 1990 ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தனர்.

வவுனியாவில்கள்ளிக்குளம், மேற்குளம், பெரியபுளியங் குளம், சின்னக்குளம், இளமருதங்குளம், ஊஞ்சல்கட்டி, வெடிவைத்தகல், வீமன்கல் போன்ற பகுதிகளில் வசித்த மக்களும் 90 இற்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்கள்.

தற்போது, எல்லைப் பிரதேச மாகவுள்ள அந்த பிரதேசங் களில் திட்டமிட்ட குடியேற் றங்கள் இடம்பெறுகின்றன என வடமாகாண சபை உறுப் பினர் சத்தியலிங்கம் சுட்டிக் காட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் உங்களுடைய கட்சிதானே அந்தமக்களுடைய வாக்குகளைப் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டு இருக்கின்றது. எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த இந்தவிடயம் குறித்து அரசுடன் பேசவேண்டும். அதைவிடத்து இங்கு அதனை பேசுவதில் பயனில்லை என்றார்.

இதன்போது குறுக்கிட்ட வடமாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம், நீங்களும் வன்னியில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தான் நாடாளுமன்றம் சென்றீர்கள். அந்த மக்களுக்கு பதில் கூற வேண்டிய தேவை உங்களுக் கும் இருக்கிறது.- என்றார்.

இதன்போது நான் அந்த மக் களுக்கு எதிராக கூறவில்லை. அவர்களுக்கும் வீட்டுத்திட்டம் வழங்க வேண்டும். இது தொடர்பில் அனைவரும் இணைந்து செயற்படுவோம் என அமைச்சர் தெரிவித்துடன் அந்த விடயம் முடிவுக்குவந்தது. (க100)

## நீதிமன்ற உத்தரவையும் மீறி சீனப் பிரஜை ஹோட்டல் கட்டியுள்ளார்

### மக்கள் குற்றச்சாட்டு

கட்டுமானப்பணிகளை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், அந்தக் கட்டளையை மீறி கொழும்பு - 07, ஏனர்ஸ்ட் சில்வா மாவத்தையில் சீன வர்த்தகர் ஒருவர்ஹோட்டல்ஒன்றை கட்டியுள்ளார் என பிரதேச வாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கொழும்பு-07,ஏனர்ஸ்ட் டி சில்வா மாவத்தையை அண்மித்த பிரதேசங்க ளில் வியாபார நிலையங்கள் கட்டுவதற்கு அனுமதி இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.


கட்டுமான பணிகள் காரணமாக ஏற்படுகின்ற அதிக சத்தம் மற்றும் தூசி எழும்புவது சம்பந்தமாக பல தடவைகள் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி அதிகாரசபைமற்றும்கொழும்பு மாநகர சபை என்பவற்றுக்கு அறிவிக்காமல் இந்தகட்டுமானப்பணிகள் இடம்பெற்றுள்ளன என தெரியவந்துள்ளது.

இந்தஹோட்டல்வெளிநாட்டவர்களுக்காக மாத்திரமே திறக்கப்பட்டுள்ளது என பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பில் கலந்துரையாடல்

### நாடு கடந்த தமிழீழ அரசு மேற்கொண்டது



வவுனியா, ஜுன் 27

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நாடு கடந்த தமிழீழ அரசு இலங்கை தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசின் விளையாட்டு, சமூகநல அமைச்சின் பிரதியமைச்சர் சொ.யோகலிங்கம் தலைமையில் அண்மையில் பிரித்தானிய நாடாளுமன்றத்துக்குள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் டேவிவுடன் இலங்கையில் இடம்பெறும் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு பற்றி கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கைக்கான ஆயுத உதவிகளை நிறுத்துவதற்கு பிரித்தானியப் நாடாளுமன்றத்தில் வலியுறுத்துமாறும் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் Tolworth Hook Rise ward பகுதி கவுன்சிலர் தயா தயாளன், இந்த நிகழ்வின் பிரதான ஒருங்கிணைப்பாளர் தோமஸ் ரவிச்சந்திரன், உதவி ஒருங்கிணைப்பாளர் கனகரத்தினம் நற்குருவேந்தன் மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசின் பல செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தமது கருத்துகளை தெரிவித்திருந்தனர்.

(க100)

## மஹாநாம, திஸாநாயக்கவின் பிணை மனு நிராகரிப்பு : விளக்கமறியல் தொடர்கிறது



கொழும்பு, ஜுன் 27

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோரின் பிணை மனு நிராகரிக்கப் பட்டுள்ளநிலையில் அவர்களின் விளக்கமறியல் தொடர்ந்தும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

54 கோடி ரூபாவை இலஞ்சமாக கோரியிருந்த நிலையில் அது பின்னர் 10 கோடியாகக் குறைக்கப்பட்டு பின்னர் 2 கோடி ரூபாவை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டின் பேரில் ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் திஸா நாயக்க ஆகி யோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், இருவரின் பிணை மனுவை கொழும்பு பிரதான நீதிவான் நீதி மன்றம் நிராகரித்துடன் எதிர்வரும் ஜுலை மாதம் 10 திகதி வரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டுள்ளது. (கு)

## யாழ். மாநகரின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை துரிதகதியில் முன்னெடுக்க வேண்டும் - உறுப்பினர் குகேந்திரன்

யாழ். நகர எல்லைக்குட்பட்ட இடங்களிலும் முக்கியமான பகுதிகளிலும் சி.சி.ரி.வி. கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு யாழ். நகரில் ஏற்படுகின்ற குற்றச் செயல்களையும் சமூக சீரழிவுகளையும் கட்டுப்படுத்த முடியும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளரும் யாழ் மாநகரசபை உறுப்பினருமான காவேலும் மயிலும் குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரின் அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போதே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாநகரசபையின் நிதிக் குழுவுக்கு பக்கபலமாக நிதிவிதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன், யாழ். மாநகரசபைக்குட்பட்ட மீன் சந்தைகளில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்திக் கொண்டு செல்லும்போது கழிவுகளில் இருந்து நீர் கொட்டப்பட்டு அதிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது இதை மக்களின் நலன்கருதி கருத்திலெடுத்து தீர்வு காணப்பட வேண்டும்.

மேலும், அரசகாணி, தனியார் காணி, கோயிற்காணி போன்றவற்றில் குடியிருக்கும் மக்களுக்கு சோலைவரி செலுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாஷையூர் பகுதிகளில் உள்ள மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் 7 குடும்பங்கள் பல வருடகாலமாக வசித்துவருகின்ற. அவர்களுக்கு நிரந்தரமான காணி உறுதி வழங்கப்படல் வேண்டும்.

யாழ் . மாநகரசபை மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் முடத்தடி பிரதான வீதி தாங்கி பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

இதனால், விநியோகிக்கப்படும் நீரானது பல இடங்களுக்கு சென்றடைவதில்லை. இதன் காரணமாக இந்தத் தாங்கி முழுமையாக புனரமைக்கப்படவேண்டும்.

யாழ். பஸ்தரிப்பு நிலையத்திலும் பலமுக்கிய இடங்களிலும் மலசல கூடவசதிகள் அற்று காணப்படுகின்றன. இதனால், வெளி மாவட்டங்களில் இருந்துவரும் பயணிகள் அண்மைக்காலமாக தங்கள் அவசர தேவைகளை வீதியோரங்களில் கழிக்கின்றனர். இதில் பெண்கள் சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உடனடி தீர்வாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ள மலசலகூடம் உடனடியாக மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட வேண்டும். மேலும், இரண்டு அல்லது மூன்று மலசல கூடங்கள் மேலதிகமாக அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(கு)

## தமிழரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனவாதிகளுக்குத் தஞ்சம் கொடுத்து அவர்களைப் பாதுகாத்துவருகிறார். அத்துடன் சுதந்திரக் கட்சியை வளர்த்துக் கொள்வதிலேயே அவர் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின் 125 ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில்நேற்றுநடைபெற்றது.

இதன்போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் அபகரிப்புக்கள் குறித்து உறுப்பினர் ரவிகரன் கொண்டு வந்த பிரேரணையின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலையே அஸ்மின் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் உறுப்பினர் ரவிகரன் பல பிரேரணைகளைக் கொண்டு வந்துள்ளார். அவை குறித்து விவாதித்துப் பல தீர்மானங்களையும் நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் அங்கு பிரச்சினைகள் தீர்க்கப்படாது மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டுதான் வருகின்றன.

ஆகவே ஜனாதிபதிக்கு எமது பிரச்சினைகளைத் தெரிவிப்பதிலோ அல்லது அவர்கள் எமக்காக செயற்படுவார்கள் என்பதிலோ எந்தவித நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் இன்று இனவாதிகளைப் பாதுகாத்து அவர்களுக்குத் தஞ்சம் கொடுப்பதிலும் தனது கட்சியை வளர்த்துக் கொள்வதிலுமே ஜனாதிபதி கவனமெடுத்துச் செயற்பட்டு வருகின்றார்.

இங்கு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன எனப் பல பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக இராணுவத்தை வெளியேற்றிக் காணிகளை விடுவித்துள்ளனர் எனத் தென்னிலங்கையில் இனவாதிகள் பிரசாரம் செய்கின்றனர். ஆனால் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளே விடுவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்குள்ள அரச காணிகள் பலவற்றையும் படையினர் ஆக்கிரமிப்பதற்கான முயற்சியே நடைபெற்று வருகின்றது.

இவ்வாறு எமது பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் எமது ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட இந்த ஆட்சியின் ஜனாதிபதி இனியும் எங்களுக்காகச் செயற்படுவார் என்று கருத முடியாது.

எனவே எமது பிரச்சினைகளைத் திரும்பத் திரும்ப அவர்களுக்குச்சொல்வதில்பயனில்லை. ஆகையால் அவற்றை நாம் சர்வதேசத் தரப்பினர்களுக்கே வெளிப்படுத்த வேண்டும் – என்றார். (ஐ-7)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதையும் நான் முன்னெச்சரிக்கையாகக் கூறுகிறேன். தமிழ் மக்கள் விடயத்தில் நம்பிக்கை கொடுத்து ஏமாற்றியிருக்கும் ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் கூட்டுக் குற்றவாளிகள்" – இவ்வாறு குற்றஞ் சாட்டினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்.

நேற்றைய மாகாண சபை அமர்வில்ரவிகரனால்கொண்டு வரப்பட்ட பிரேரணை மீது உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு ஆக்கிரமிப்புக்கள் உட்பட தமிழ் மக்கள் எதிர் நோக்கிவரும்பிரச்சினைகளைச் சர்வதேசத்துக்கு தெரிவிக்க வேண்டுமென்றும், தமிழ் மக்கள் ஜனாதிபதியை இனியும் நம்பத் தயாரில்லை என்றும் உறுப்பினர் அஸ்மின் கூறியிருக்கின்றார்.

அதேநேரம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மத்திய அரசுடன் பேசித் தீர்த்திருக்கலாம் என்றும் அதனைச் செய்யாததாலேயே பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்றும் எமது சபையின் இன்னொரு உறுப்பினர்சயந்தன் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்களிடத்தே இன்றிருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணிகளைவிடத் திறமையான சட்டத்தரணிகள் முன்னர் இருந்தனர். அவர்களாலேயே மத்திய அரசுடன் எமது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முடியவில்லை. அவ்வாறு முடியாமல்போனதால்தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தீர்வை வலியுறுத்திப் போராடி வருகின்றனர்.

இந்தச்சபையில் உறுப்பினர் ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்புக்கள், குடியேற்றங்கள் உள்ளிட்ட பலவிடயங்கள் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருந்தால் முல்லைத்தீவு மாவட்டம் முல்லைத்தீவாகவே இருந்திருக்கும்.

ஆனால் அரசு அதனைச் செய்ததா என்று நாங்கள் பார்க்க வேண்டும். அவ்வாறு ஏதும் நடைபெறாத நிலையில் தான் ஆட்சி மாற்றமொன்று கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்த ஆட்சியும் அதனைச் செய்ததா என்றால் இல்லை என்கின்ற நிலையே காணப்படுகின்றது.

ஆக, இந்த ஜனாதிபதி மட்டுமல்ல பிரதமரும் தான் எதனையும் செய்யவில்லை – என்றார்.

இதன்போது எழுந்த உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஜனாதிபதி, பிரதமர் மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவருமே கூட்டுக் குற்றவாளிகள் தான் – என்றார்.

இதன் பின்னர் தனது உரையைத் தொடர்ந்த கஜதீபன், தற்போது இந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் எமது பிரச்சினைகளைத் தீர்க்கவோ அல்லது தமிழ் மக்களுக்காக எதனையும் செய்யவோ இல்லை என்று இன்று சொல்லலாம். ஆனால் ஜனாதிபதி மட்டுமல்லர், பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவர் மீதும்தான் குற்றம் சொல்ல வேண்டும்–என்றார். (ஐ-7)

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதுதான் எமக்குப் புரிந்திருக்கிறது என்று பொது பலசேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை 'தந்திர நரி' என்று விடுதலைப்புலிகளின்தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டமை முற்றிலும் உண்மையே.

பிரபாகரனுக்கு அப்போதே புரிந்த விடயம், தற்போதுதான் எமக்குப் புரிந்துள்ளது.

அரசியலில் இடம்பெறும் ஒவ்வொரு விடயத்தையும் பிரதமர் தனக்குச் சாதகமான முறையில் – மிகத் தந்திரமான முறையில் – எவருக்கும் தெரியாத வகையில் – பயன்படுத்திக் கொள்கின்றார்.

நாட்டு மக்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுத் தருவதாகக் கூறி அவரே, இனங்களுக்கிடையில் மறைமுகமாக வன்முறையை தோற்றுவிக்கிறார்.

இனிவரும் காலங்களில் எந்த அரசியல் தரப்பினருக்கும் ஆதரவு வழங்கப்போவது கிடையாது. நாட்டு மக்கள் மஹிந்தவையும் நம்பவேண்டாம், மைத்திரியையும் நம்ப வேண்டாம்.

சிறந்த அரசியல் தலைவரைச் சிங்கள – பௌத்த மக்கள் ஒன்றிணைந்து தெரிவு செய்ய வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும்போது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகள் முக்கியமாக உள்ளன.

ஆனால் இரண்டு பிரிவினரின் கோரிக்கைகளையும், கடந்த அரசும், தற்போதைய அரசும் நிறைவேற்றவில்லை.

சிங்கள, பௌத்த பெரும்பான்மை மக்கள் கடந்த காலங்களில் அரசியல் ரீதியில் விட்ட தவறுகளை இனிமேலும் தொடரக் கூடாது – என்றார்.

இதேவேளை, சிறைச்சாலையில் தனக்குக் காற்சட்டையை அணிவிக்க முயற்சிக்கப்பட்ட போதும், தான் அதனை அணியவில்லை என்றும் ஞானசார தேரர் கூறினார்.

சிறையில் இருந்த ஐந்து நாள்களும் தான், காவி உடையைக் கழற்றி வைத்துவிட்டு, சாரமும் சட்டையும் அணிந்திருந்தேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

காட்டுப்புலத்தில் ஆரம்பித்த போராட்டம் ஆர்ப்பாட்டமாக மாறி சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை ஊடாக சுழிபுரம் சந்தியை அடைந்து அங்கும் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தொடர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சென்று அங்கும் கல்லூரிக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ஐ-7)

## வீட்டுத்திட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கும் பொறுப்பைச் சீன நிறுவனத்திடம் கையளித்தமையை மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நியாயப்படுத்தியுள்ளார்.

இந்த வீடமைப்புத் திட்டத்தைச் சீனாவிடம் இலங்கை வழங்கியமை குறித்து இந்தியா கடும் அதிருப்தியடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியான நிலையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தீவிர பரிசீலனைக்குப் பின்னரே வீடமைப்புத் திட்டத்தைச் சீன நிறுவனத்துக்கு வழங்கியுள்ளோம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பொறுப்பு சீன நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் இரண்டு வருடங்களில் வீடமைப்புத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய இணங்கியுள்ளது. இதன் மூலம் வீடுகள் அவசரமாகத் தேவைப்படும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இன்னமும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. இந்த வீடமைப்புத் திட்டம் மூலம் 7000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் – என்றார். (ஐ)

# வரவேற்பும் பாராட்டும்

யாழ்ப்பாணம், ஜுன் 27

யாழ் கல்வி வலயத்தின் கணித ஆசிரியர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள சேவை நலன் பாராட்டு விழாவும் வரவேற்பு விழாவும் இன்று காலை 9 மணி முதல் 11 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற விருக்கின்றன.

யாழ் கல்வி வலயத்தின் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி. சுதர்ஷினி ஸ்ரீகாந்தனின் சேவையைப்பாராட்டியும் கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளராகப் புதிதாகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட சுப்பிரமணியம் சரவணபவனை வரவேற்றும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## செங்கோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நேற்றைய மாகாண சபை அமர்வில் சபை அறிவிப்புக்களை வழங்குகையிலையே அவர் மேற்கணடவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண சபையில் ஆளணிப் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உள்ளது. இதனால் பல்வேறு சிரமங்களை நிர்வாகத்தில் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. குறிப்பாக இன்று (நேற்று) நடைபெறும் சபை அமர்வில் சபைக்கு செங்கோலைக் கொண்டு வருவதற்குக் கூட ஆளில்லாமல் பெரும் சிரமப்பட்டிருந்தோம்.

இங்கு எமக்கு ஆறு பேர் இருக்கவேண்டிய நிலையில் மூன்று பேர்தான் உள்ளனர். அவர்களில் ஒருவர் விடுப்பில் நின்றால் சபை அமர்வை நடத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே இத்தகைய ஆளணிப் பிரச்சினைகள் தொடராது அவற்றைத் தீர்த்து வைக்கச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில், எமது சபையின் பதவிக்காலம் முடிவடைய இன்னமும் நான்கு மாதங்களே உள்ளன. ஆகவே அதற்குள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையில் ஆளணி வெற்றிடத்தை நிரப்ப வேண்டும்.

இதனை நான் கோபத்தில் பேசவில்லை. எனக்கிருக்கும் ஆதங்கத்திலேயே கூறுகின்றேன். எனவே நிர்வாகத்தில் கவனம் செலுத்தி அடுத்து வரும் சபையினருக்குச் சிறந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் – என்றார். (ஐ-7)

## போதைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆயிரம் மாணவிகள் இதில் பங்கேற்றனர்.

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்புத் தினமான நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆயிரம் மாணவிகள் இந்தவிழிப்புணர்வு ஊர்வலத்தை நடத்தினர்.

பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலம் அரசடி வீதி ஊடாக பிறவுண் வீதியை அடைந்துபின்னர் இராமநாதன் வீதி ஊடாகப் பலாலி வீதியை அடைந்து மீண்டும் அரசடி வீதி ஊடாகப் பாடசாலையை வந்தடைந்தது. ஊர்வலத்தில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர். (ஐ-7)

## சிகரெட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கு முன்னர் சிகரெட் வகைகளை முற்றாகத் தடை செய்யவேண்டும் என வடக்கு மாகாண சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்றைய மாகாண சபை அமர்வில், புகையிலையை மத்திய அரசு தடை செய்வது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நாட்டில் அரசு புகையிலையைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறது. அதற்கு மாற்றுப் பயிர்கள் குறித்தும் பேசப்படுகின்றது. ஆனால் புகையிலையைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் சிகரெட்டைத் தடை செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

ஆகவே நாட்டில் புகையிலையைத் தடை செய்ய முன்னர் சிகரெட்டை தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-7)

## காது தோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி சத்தமிட்டமையால் அருகில் இருந்த மாடு கட்டும் கயிற்றால் சிறுமியின் கழுத்தை அவர் இறுக்கிக் கொலைசெய்துள்ளார்.

பொலிஸ் வட்டாரகள் இத்தகவலை வெளியிட்டன.

தீவிர விசாரணையின் பின் சிறுமியின் சீருடை மறைத்து வைக்கப்பட்டிருந்த பற்றையைப் பகுதியை பிரதான சந்தேகநபர் அடையாளம் காட்டினார். பாடசாலைச் சீருடை எரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. சிறுமியின் தோடும் மீட்கப்பட்டது

சுழிபுரம் காட்டுபுலம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் சிவனேஸ்வரன் றெஜீனா (வயது – 6 ) என்ற சிறுமி அப்பகுதித் தோட்டக் கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவத்தையடுத்துச் சிறுமியின் உறவினர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொலை நடைபெற்றதாகக் கூறப்படும் இடத்துக்கு வந்து சென்ற–பிரதான கொலையாளியின் நண்பர்களான – நால்வர் பொலிஸார் அழைத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சிவனேஸ்வரன் றெஜீனா பாடசாலை முடித்து திரும்பும் போது, அவரைப் பிரதான சந்தேகநபர் கடத்திச் சென்று பற்றைக்குள் வைத்து கழுத்தில் கயிற்றால் இறுக்கி கொலை செய்துள்ளார்.

சிறுமியின் தோடுகளை எடுத்து, சீருடையையும் களைந்து விட்டுச் சடலத்தை அவர் கிணற்றுக்குள் போட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் சீருடை எரிக்கப்பட்டது எனப் பிரதான சந்தேகநபரால் நேற்று அதிகாலை தெரிவிக்கப்பட்டது. நேற்று முற்பகல் அனைத்து விடயங்களையும்வெளிப்படுத்தியபிரதான சந்தேகநபர், சீருடை போடப்பட்ட இடத்தைக் காண்பித்தார்.

விசாரணைகளின் பின்னர் 5 சந்தேகநபர்களும் நேற்றுப் பிற்பகல்கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் ஐந்து பேரும் இன்று மல்லாகம்நீதிவான்முன்னிலையில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

# ஸ்பெயின், போர்த்துக்கல் அடுத்த சுற்றுக்குத் தகுதி

ரஷ்யாவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ணப் போட்டிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முக்கியமான முதற்சுற்றுப் போட்டிகளில் ஈரானுடனான போட்டியை சமநிலையில் முடித்துக்கொண்ட போர்த்துக்கல் அணியும் மொராக்கோவுடனான போட்டியை சமநிலையில் முடித்துக்கொண்ட ஸ்பெயின் அணியும் குழு 'பி' யிலிருந்து அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

ஈரான் அணிக்கெதிராக நேற்று



முன்தினம் நடைபெற்ற போட்டியின் 45ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் ரிகார்டோ குவேரெஸ்மா கோல் அடிக்க போர்த்துக்கல் முன்னிலை பெற்றது.

93ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஈரானின் அன்சார்பிராட் கோலடித்து சமநிலையை உருவாக்கினார். இறுதியில் ஆட்டம் 1-1 என சமநிலையானது. 5 புள்ளிகள் பெற்ற போர்த்துக்கல் நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறியது.

மொராக்கோ-ஸ்பெயின் அணிகளுக்கு இடையிலான போட்டி ஆரம்பித்தது. முதலாகவே இரு அணி வீரர்களும் சிறப்பாக ஆடினர். ஆட்டத்தின் முதல் பாதியில் 14ஆவது நிமிடத்தில் மொராக்கோ அணியின் காலித் பவுடாய் ஒரு கோல் அடித்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்பெயின் அணியின் இஸ்கோ 19ஆவது நிமி டத்தில் ஒரு கோல்அடித்தார். இதனால் ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் 1-1 என சமனிலை வகித்தன.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் 81ஆவது நிமிடத்தில் மொராக்கோ அணியின் யூசுப் என் நெய்ஸ்ரி ஒரு கோல் அடித்தார். இதனால் மொராக்கோ வெல்லும் என எதிர்பார்த்தனர்.

ஆனால், கூடுதலாக வழங்கப்பட்ட நிமிடங்களில் முதலிலேயே, 91 ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் லாகோ அஸ்பாஸ் ஒரு கோல் அடித்து ஆட்டத்தைச் சமனிலைக்கு கொண்டு வந்தார்.

இறுதியில், ஸ்பெயின் மற்றும் மொராக்கோ அணிகளுக்கு இடையிலான போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதனால் இரு அணிகளுக்கும் தலாஒரு புள்ளி கிடைத்தது. 'ஆனாலும், புள்ளிகள் அடிப்படையில் குழு 'பி'யில் முதலிடம் பிடித்த ஸ்பெயின் அணி அடுத்த சுற்றில் நுழைந்தது. அடுத்த சுற்றில் ரஷ்யா அணியுடன் மோதவுள்ளது.போர்த்துக்கல் அணி குழு 'ஏ'யில் முதலிடம் பிடித்த உருகுவே அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரஷ்யாவை வீழ்த்தி உருகுவே ஆதிக்கம்

உலகக்கிண்ணக் கால்பந்து முதற்சுற்றுப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் ரஷ்யாவை வீழ்த்தியது உருகுவே. இப்போட்டியின் முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்திய உருகுவே 3-0 என முன்னிலையில் இருந்தது. இதேபோல் 2 ஆவது பாதியிலும் உருகுவே ஆதிக்கம் தொடர்ந்தது. இறுதி வரை ரஷ்யா கோல் அடிக்கவில்லை.

இறுதியில் 3-0 என்ற கோல் கணக்கில் ரஷ்யாவை வீழ்த்தி உருகுவே அணி அபார வெற்றி பெற்றுள்ளது. இதனை அடுத்து குரூப் ஏ பிரிவில் 9 புள்ளிகளைப் பெற்று உருகுவே அணி முதல் இடத்தில் உள்ளது.

21ஆவது பிபா உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டிகள் ரஷ்யாவில் நடக்கின்றன. போட்டியில் பங்கேற்கும் 32 அணிகளும் தலா 4 அணிகள் என 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் உள்ள மற்ற மூன்று அணிகளுடன் விளையாடும்.

அதன்படி ஒவ்வொரு அணியும் இரண்டு ஆட்டங்களை முடித்துள்ளன. ஏ பிரிவில் இருந்து ரஷ்யா, உருகுவே, சி பிரிவில் இருந்து பிரான்ஸ், டி பிரிவில் இருந்து குரேஷியா, எவ் பிரிவில் இருந்து மெக்சிக்கோ, ஜி பிரிவில் இருந்து பெல்ஜியம், இங்கிலாந்து ஆகியவை ஏற்கனவே அடுத்தச் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

பிரிவு சுற்றில் மூன்றாவது ஆட்டங்கள் நேற்று முன் தினம் துவங்கின. இதில் ஏ பிரிவில் இருந்து நொக் அவுட் சுற்றுக்கு ஏற்கனவே முன்னேறியுள்ள ரஷ்யா மற்றும் உருகுவே மோதின.

இதில் 10ஆவது நிமிடத்தில் சுவாரேஸ் கோலடிக்க உருகுவே 1-0 என முன்னிலை பெற்றது. 23 ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் செர்ரிவே சேம் சைட் கோலடிக்க உருகுவே 2-0 என முன்னேறியது. ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் கவானி கோலடிக்க 3-0 என உருகுவே வென்றது. இதன் மூலம் ஏ பிரிவில் உருகுவே முதலிடத்தைப் பிடித்தது.

(ஐ)

# 45 வயதில் கோல் காப்பாளர்; சாதனை படைத்த எகிப்து வீரர்



உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் மிகவும் அதிக வயதில் களம் இறங்கிய வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை எகிப்து கோல்காப்பாளர் படைத்துள்ளார்.

உலகக்கிண்ணகால்பந்துத் தொடர் ரஷ்யாவில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு போட்டியில் எகிப்து - சவுதி அரேபியா அணிகள் மோதின.

ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் எகிப்து அணியின் நட்சத்திர வீரர் மொஹமட் சாலா கோல் அடித்தார். 41ஆவது நிமிடத்தில் சவுதி அரேபியாவுக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. சவுதி அரேபியாவின் பஹத் பந்தை அடிக்க எகிப்து கோல் காப்பாளர் எஸ்ஸம் எல் ஹடாரி சிறப்பாக தடுத்தார்.

பெனால்டி தடுத்தது பெரிய விடயம் இல்லை. இந்தப் போட்டியில் களம் இறங்கியதன் மூலம், மிகவும் அதிக வயதில் அதாவது 45 வயதில் உலகக் கிண்ணத்தில் விளையாடிய வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்.



# குசல் பெரேரா படுகாயம்

மேற்கிந்தியதீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இலங்கை வீரர் குசல் ஜனித் பெரேரா படுகாயம் அடைந்தார்.

இரு அணிகளுக்கிடையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியின் 2 ஆவது இன்னிங்ஸில் களத்தடுப்பில் குசல் பெரேரா ஈடுபட்டிருந்தார். அப்போது எல்லைக் கோட்டுக்கு அருகிலிருந்த விளம்பர பலகையில் மோதியதில் அவருக்கு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மைதானத்துக்கு அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அவருக்கு முதலுதவிகள் வழங்கப்பட்டதன் பின்னர் அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி தற்போது இடம்பெற்று வரும் நிலையில் இலங்கை அணி 144 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

முன்னதாக மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 93 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. இதேவேளை இலங்கை அணிதனதுமுதலாவது இன்னிங்ஸில் 154 ஓட்டங்களை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ண உதைபந்து

## இன்றைய ஆட்டங்கள்

FIFA WORLD CUP RUSSIA 2018

| | | |
|---|---|---|
| கொரிய குடிசு | 7.30 p.m | ஜேர்மனி |
| மெக்ஸிக்கோ | 7.30 p.m | சுவீடன் |
| சேர்பியா | 11.30 p.m | பிரேசில் |
| சுவிற்ஸர்லாந்து | 11.30 p.m | கொஸ்டாரிக்கா |

# கூட்டு அரசு ஒன்றும் செய்யவில்லையெனில் நாம் என்ன இராணுவப் புரட்சியா செய்வது?

## மாகாண சபை உறுப்பினர் சயந்தன் கேள்வி

யாழ்ப்பாணம், ஜுன்27

மைத்திரி - ரணில் கூட்டு அரசை நாங்கள் ஆட்சிக் கொண்டு வந்திருந்தாலும் அந்த அரசு எமக்கு ஒன்றுமே செய்யவில்லைஎன்றால்நாங்கள் என்னஇராணுவப்புரட்சியா செய்வது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி கேசவன் சயந்தன் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்று இடம் பெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்புக்கள் குறித்து பிரேரணையொன்றைக் கொண்டு வந்தார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின்போது தமிழ் மக்களின் ஆதரவுடன் கொண்டு வரப்பட்ட ஜனாதிபதியும் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யாதுஏமாற்றிவருகின்றனர் என உறுப் பினர் அயூப் அஸ்மின் குற்றஞ் சாட்டினார்.

'நாங்கள் தான் ஆட்சியைக் கொண்டு வந்தோம். ஆனால் அரசு எதனையும் செய்யவில்லை என்று தற்போது உறுப்பினர் அஸ்மின் கூறியிருக்கின்றமையானது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் இதற்கு அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? இதற்கானபொறுப்புக் கூறல் என்ன? அதை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கவேண்டும்' என்று எதிர்க்கட்சி உறுப்பினரான தவநாதன் சபையில் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய உறுப்பினர் சயந்தன், நாங்கள் தான் ஆட்சியைக் கொண்டு வந்தோம் என்றாலும் ஆட்சியாளர்கள் செய்யவில்லை என்பதையும் நாங்கள்தான் கூறுகின்றோம். இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்' அரசு செய்யவில்லை என்பதற்காக இராணு வப் புரட்சியையா எங்களைச்செய்யச்சொல்கின்றீர்கள்?- என்று தவநாதனிடம் கேட்டார்.

அதற்கு தவநாதன், செய்யவில்லை என்றால்



என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் எனக் கேட்டார். இதற் குப் பதிலளித்த சயந்தன், அடுத்த தேர்தல் வரும் தானே. அவ்வாறு தேர்தல் வரும்போது தோற்கடிப் போம்- என்றார். (ஐ-7)

# விக்கியைச் சாடினார் சயந்தன்

யாழ்ப்பாணம், ஜுன்27

மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயற்படாமல் விட்டுவிட்டு, மத்திய அரசு மாகாண அரசின் எதிரி என்று சொல்லி அரசியல் பேசி பதவிக் கதிரைகளைப் பாதுகாக்கவே செயற்படுகிறோம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரனைச் சாடினார் உறுப்பினர் கேசவன் சயந்தன்.

மாகாண சபை அமர்வில் நேற்று உறுப்பினர் ரவிகரன் கொண்டுவந்த பிரேரணை மீது உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாண சபையில் இருந்து கொண்டு மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயற்படாது விட்டுவிட்டு மத்தி மாகாணத்துக்கு அநீதி இழைக்கிறது என்று கூறுகின்றோம். அது மட்டுமல்லாமல் மத்திய அரசு மாகாண அரசின் எதிரி என்றும் கூறுகின்றோம். அதனூடாக அரசியல் பேசிப் பதவிக் கதிரைக்காகச் செயற்படுகின்றோம்.

நாம் செய்ய வேண்டியதைச் செய்யாமல் வெறுமனே அறிக்கைகளை மாத்திரம் விட்டுக் கொண்டிருப்பதுடன் போராட்டங்களை நடத்துகின்றோம். விடுகின்ற அறிக்கைகளைப் புத்தகங்களாகவும் வெளியிடுகின்றோம்.

இவ்வாறு கதைப்பதால் வாக்கு வரும். ஆனால் நிலம் பறிபோய் விடும். ஆகவேநாம்செய்யவேண்டியதைச் செய்யா மல் தவறிழைத்திருக்கின்றோம் - என்றார்.

(ஐ-7)

# தபால் ஊழியர்களின் போராட்டம் நிறுத்தம்

## வியாழன் முதல் தபால் சேவை வழமைக்கு

கொழும்பு, ஜுன் 27

16 நாள்கள் நீடித்த தபால் திணைக்கள ஊழியர்களின் தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இடைநிறுத்தப்படுவதாக தபால் ஊழியர்களின் ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார நேற்று மாலை அறிவித்தார்.

தபால் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கான தீர்வு விரைந்து வழங்கப்படும் எனத் தபால்துறை அமைச்சர்ஏ.எச்.எம்.ஹலீம் வழங்கியஉறுதிமொழியை அடுத்துத் தமது தொடர் போராட்டத்தை எதிர்வரும் ஜுலை 7ஆம் திகதி வரை இடைநிறுத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாளைவியாழக்கிழமை முதல் தபால் சேவைகள் வழமைக்குதிரும்பும்எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு, நிரந்தர நியமனம் மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கையை முழுமையாகநடைமுறைப் படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முனவைத்து கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மத்திய விநியோகப் பகுதி உட்படத் தபால் திணைக்கள ஊழியர்கள் 24 ஆயிரம் பேர் நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் தொடர் போராட்டத்தின் 16ஆவது நாளான நேற்று தபால் அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டது. இதனையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்புத் துறைமுகம் அருகே மூழ்குகின்றது சரக்குக் கப்பல்

## 11 மாலுமிகள் கடற்படையால் மீட்பு







கொழும்பு, ஜுன் 27

கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பால் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்து 11 மாலுமிகள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து, 11.6 கடல் மைல் தொலைவில், முத்தா பைனியர் என்ற சரக்குக் கப்பல் கட்டுப்பாட்டை இழந்து மூழ்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கப்பலில் இருந்துநேற்று அதிகாலை விடுக்கப்பட்ட அவசர உதவிக் கோரிக்கையை அடுத்து, இலங்கைக் கடற்படையின் இரண்டு அதிவேகத் தாக்குதல் படகுகள், விரைந்து சென்று, கப்பலில் இருந்த மாலுமிகளை மீட்டன.

டொமினிக்கன் குடியரசுக் கொடியுடன் பயணித்த இந்தக் கப்பலில், இருந்து கப்டன் மற்றும் 10 மாலுமிகள் மீட்கப்பட்டுக்கொழும்புத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

மீட்கப்பட்ட கப்பலின் கப்டன் உள்ளிட்ட 10 மாலுமிகள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஒரு மாலுமி இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்.

மூழ்கியுள்ள கப்பல், இந்தியர் ஒருவருக்குச் சொந்தமானது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# புகையிலைக்கு மாற்றுப் பயிர் ஊக்குவிக்கவேண்டும் அரசு

## வடக்கு மாகாண சபையில் விவசாய அமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன்27

வடக்கு மாகாணத்தில் வளம் கொழிக்கும் புகையிலைச் செய்கையை நிறுத்தி மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்துவதாக இருந்தால் அத்தகைய பயிர்களை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு அந்தப் பயிரை இறக்குமதி செய்வதையும் மத்திய அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவை குறித்து மத்திய அரசுடன் மாகாண அரசு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

-இவ்வாறு வடக்கு மாகாண சபையின் விவ சாய அமைச்சர் சிவநேசன் நேற்று இடம்பெற்ற மாகாண சபை அமர்வின் போது தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை யின் அமர்வு நேற்று இடம் பெற்றது.

இந்த அமர்வில், புகையிலை தடை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கான மாற்றுப் பயிர்களை ஊக்குவித்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்துப் பொருத்தமான நடவடிக்கைகளைஅரசுமேற்கொள்ளவேண்டுமென ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விவசாய அமைச்சரைக் கோருவது என்று உறுப்பினர் இ.ஜெயசேகரம் பிரேரணையொன்றைக் கொண்டு வந்திருந்தார்.

இப் பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றும்போதே விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மத்திய அரசு நாடு முழுவதும் புகையிலையைத் தடை செய்யப் போவதாக அறிவித்திருக்கின்றது. அவ்வாறு தடை செய்தால் இங்குள்ள புகையிலைச் செய்கையாளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்குவார்கள். எனவே அத்தகைய பாதிப்புக்களைக் கருத்திற் கொண்டு மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்யவேண்டும்.

அவ்வாறு மாற்றுப்பயிர்களை அறிமுகம் செய்து அதனை ஊக்கு விக்கவேண்டும். அந்தப் பயிர்களை மத்திய அரசு இறக்குமதி செய்யக்கூடாது. இந்த விடயங்கள் தொடர்பில் மாகாண அரசு மத்திய அரசுடன் ஒப்பந்தங்களைச் செய்த கொள்ள வேண்டும் - என்றார்.

புகையிலைக்கு மாற்றுப்பயிர்கள் என்பது வெறுமனே பேச்சளவில் மட்டும் இருப்பதால் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. மக்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களின் வருமானத்துக்கு ஏற்றதாக மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்யவேண்டும். எனவே இத்தகைய விடயங்களில் அரசு கவனமெடுத்துச்செயற்படவேண்டும்.- என உறுப்பினர் த.குருகுலராசா தெரிவித்தார்.

நாம் புகையிலையையும் சிகரெட்டையும் ஒன்றாக ஒப்பிட முடியாது. சிகரெட்டை புகைக்க மட்டுமே முடியும். ஆனால் புகையிலையைச் சுருட்டாகப் பாவிப்பதற்கு, மெல்லுவதற்கு ஏராளமானவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இதனை ஆராய்ந்த துறை சார்ந்த நிபுணர்கள் புகைப் பிடிப்பவர்களைவிட புகையிலை மெல்லுபவர்களில் அதிக புற்று நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளனர் என்று கூறுகின்றனர். இதனாலேயே இலங்கை அரசு புகையிலையைத் தடை செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றது.

நாம் அவரசப்பட்டு தீர் மானம் எடுக்காது சிந்தித்து விஞ்ஞான ரீதியாக முடிவு எடுக்கவேண்டும். அதனை விடுத்து தீர்மானத்தின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டாம்.- என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சுட்டிக்காட்டினார். (ஐ-7)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.